
# அடிமாடுகள்

சிவசங்கரி



முதல் பதிப்பு : டிசம்பர், 1985
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 1987
மூன்றாம் பதிப்பு : ஜூன், 1996

587/97
5
479722
894.8113

விலை : ரூ. 16-00

1

அச்சிட்டோர் :
ஸ்ரீ துர்க்கை பிரிண்டிங் பிரஸ்,
21, மதுரை வீரன் கோயில் தெரு,
தி. நகர், சென்னை - 600 017.
☎ : 434 68 49.

CONNEMARA PUBLIC LIBRARY
7 - MAR 1997
MADRAS-600 008.

# பதிப்புரை

அறிவியல், கல்வி, மருத்துவம், விஞ்ஞானம், பொருளாதாரம் என்று பல துறைகளில் நம் நாடு சிறந்த முறையில் முன்னேற்றம் கண்டுள்ளதை நாம் உணர் கின்றோம்.

ஒரு நாட்டின் முன்னேற்றம், அந்த நாட்டில் பெண் களுக்கு அளிக்கப்படும் கௌரவத்தைப் பொறுத்து இருக் கிறது என்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் கூறியதை நினைத்துப் பார்க்கும் போது, நம் முன்னேற்றத்தில் நமக்கு ஒரு விதச் சந்தேகமும் தயக்கமும் ஏற்படுகின்றன.

நம் சமுதாயத்தின் வளர்ச்சியைப் பற்றி நாம் பெருமை பேசிக் கொண்டிருக்கும் இதே சமயத்தில், நச்சுப் புண் ஒன்று பெரிதாக வளர்ந்து நம் சமுதாயத்தை-அதுவும் முக்கியமாக நம் சகோதரிகளை வாட்டி வதைத்து வருகிறது என்னும் உண்மையை நம்மால் மறுக்க முடிய வில்லை.

அவ்வாறு சிலர் மறுத்தாலும் திருமதி சிவசங்கரி அவர்களின் ''அடிமாடுகள்'' என்ற கதையைப் படித்தால் நிச்சயம் அவர்கள் தங்கள் மனதை மாற்றிக் கொள்ள நேரிடும்.

''அடிமாடுகள்''— இந்தத் தலைப்பே நம்மைக் கலக்கி விடுகிறது. மீனாட்சி என்னும் கதாபாத்திரம் தன்னை

அடிமாடுகளுடன் ஒப்பிட்டு நினைக்கும்போது, மறக்க முடியாத வேதனை நம் நெஞ்சில் நிலைத்து விடுகிறது. நம்மிடையே நமக்குத் தெரியாமலே, எத்தனை மீனாட்சிகள் இன்னும் இருக்கிறார்களோ என்று நினைக்கும்போது வேதனையுடன் வெட்கமும் ஏற்படுகிறது.

பெரிய தேவஸ்தானங்கள் இனிப்புப் பிரசாதங்கள் அதிக அளவில் செய்யும் போது, எறும்புகளிலிருந்து அவற்றைப் பாதுகாக்கச் சுற்றிலும் சர்க்கரையால் அரண் கட்டி அந்தப் பிரசாதத்தைப் பாதுகாத்து வைப்பார்கள். எறும்பு தன் முற்றுகையைச் சர்க்கரையுடன் முடித்துக் கொண்டு பிரசாதத்தின் அருகில் நெருங்காது.

உலகம் அறியாத பார்வதி என்னும் பேதை, அந்த எறும்புகளைப் போலவே, தன் மாமனின் இனிப்புப் பேச்சில் மயங்கி, நல்லதொரு நிழலை உதறிவிட்டு, சகதியை நோக்கி ஓடி விட்டாள். அது மட்டுமல்ல. சகோதரியை அவளது புருஷன் அடிமாடாக விரட்டும் அளவிற்குத் தன்னை அறியாமல் காரணமாகி விடுகிறாள்.

நம்மிடையே இருக்கும் பேதைப் பெண்கள் "பார்வதி"களாக மாறி விடாமல் இருக்க இந்த "அடிமாடுகள்" உதவினால் திருமதி சிவசங்கரி அவர்களுக்குக் கிடைத்த வெற்றி என்று கூறுவோம்.

**கங்கை புத்தக நிலையத்தார்**

# அடிமாடுகள்

## 1

"பார்வதி......ஈ......ஈ..."

கீச்சுக் குரலில் முன் பக்கத்திலிருந்து அம்மா கத்தி அழைப்பதை லட்சியம் பண்ணாமல் பார்வதி கண்ணாடியை எடுத்து ஜன்னல் கம்பியில் மாட்டினாள்.

தம்மாத்தூண்டுக்கு, போஸ்ட் கார்ட் அளவில், ஓரத்தில் உடைந்து, பாதரசம் போய்ப் பிம்பத்தைச் சிதற அடித்ததன் முன் குனிந்து, வெளிச்சம் முகத்தில் விழ ஊன்றிப் பார்த்தாள்.

ஸ்ரீதேவி மாதிரி பெரிய கண்கள்.

ஸ்ரீப்ரியா மாதிரி குழிவிழும் கன்னம்...

நான் அழகுதான்.

நிறம் மட்டும் கூடுதலாய் இருந்ததோ, அவ்வளவுதான். ஓஹோ என்று எல்லாரும் அதிச

யித்து, பிரமித்துப் போய்விடும் வகையில் இருந்திருக் கலாம்.

பரவாயில்லை.

இப்போது அதனால் ஒன்றும் குறைந்து போய் விடவில்லை.

ஆனாலும் எதிர் வீட்டு லட்சுமிக்கு நான் என்றால் மட்டம்தான்!

என்ன பெரிய கண், ஆந்தையாட்டம்! குழி விழுந்தால் அழகோ? கிழவிக்குக்கூடத்தான் டொக்கு விழுகிறது. ஆனால் நிறம்? அதுதானே அழகு! எனக்கு அது இருக்கிறது! அதனால்தான் நாடகத்தில் என்னை ராஜகுமாரி பார்ட்டுக்கு டீச்சர் எடுத்திருக்கார்!

லட்சுமிக்குத்தான் எத்தனை பெருமை! பீத்தல்! தலையை நொடித்து நொடித்துப் பேசியதில் சுளுக்குக் கூட விழுந்திருக்கும்!

அய்! பெரிய்ய ராஜகுமாரி பார்ட்!

யாருக்கு வேண்டும் அந்தப் பாத்திரம்?

இவள் அழகு என்றா டீச்சர் தேர்ந்தெடுத்தார்? இவள் அப்பா டாக்டர். அந்த டீச்சருக்கு ஓசி வைத்தியம் வேண்டியிருக்கிறது. பெண்ணை ராஜ குமாரியாக நடிக்க வைத்தால் அப்பன் உச்சி குளிர்ந்து போய் பணம் வாங்க மாட்டார் என்று டீச்சர் கணக்குப் போட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு நான் மடச்சியா, என்ன?



பாச்சைக் குஞ்சு மாதிரி வெளுப்பு...

யாருக்கு வேண்டும் அந்த நிறம்?

கண்ணாடிக்கு இன்னும் அருகில் குனிந்த பார்வதி ஒரு தரம் மென்மையாகச் சிரித்து, வலது கன்னத்தில் விழும் குழியின் அழகை ரசித்தாள்.

முன் நெற்றியில் கொஞ்சம் முடியைப் பிரித்து விட்டுக் கொண்டாள். எச்சிலை விரலால் தொட்டு அந்த முடியில் தடவி, ஆள்காட்டி விரலால் சுழித்தாள். நாலு தரம் அப்படிச் செய்த பிறகு, முடி சுருள் போலச் சுருண்டு குதித்தது.

இந்தக் காதுப் பக்கம் ஒரு சுருள்; அந்தக் காதுப் பக்கம் இன்னொன்று.

தலையை இப்படியும் அப்படியும் திருப்பிப் பார்க்கையில் ஸ்ப்ரிங் போல அந்தச் சுருள்கள் குதிக்க, பார்வதி பெருமையுடன் தன்னை ரசித்துப் பார்த்தாள்.

கறுப்பும் ஒரு அழகு, காந்தலும் ருசி... இதுகூட தெரியாதா, அந்த மட்டி லட்சுமிக்கு?

ஓரடி பின்னால் நகர்ந்து தோளுக்குக் கீழ் குனிந்து தன் உருவத்தைத் தானே வெறித்தாள்.

போன வருஷம் பெரியவளாகும் வரைக்கும் கூட இப்படித் தன்னைத் தானே ஆராய்ந்து கொள்ளும் ஆசை தோன்றியதில்லை.

இந்த ஒரு வருஷமாய்த்தான்...

தாவணியை அவிழ்த்து உதறினாள். இரண்டே இரண்டு கொசுவங்களைப் பேருக்குக் கொசுவிச் செருகி விட்டு, தலைப்பை நீளமாகத் தொங்க விட்டாள். துணியை ஒத்தையாகப் பிரித்து மார்பில் படர விட்டுக் கொண்டபோது, தான் அழகு மட்டுமில்லை, ரொம்ப கவர்ச்சியானவளும் என்று சந்தோஷம் மதமதவென்று உள்ளுக்குள் படர்ந்தது.

பின்னே?

பதினைந்து வயசில் எவளுக்கு இத்தனை கச்சிதமாய் உடம்பு இருக்கிறது!

கிழக்கே போகும் ரயிலில் நடித்த ராதிகா மாதிரி, தளதளவென்று நான் இருப்பதில்தானே லட்சுமிக்கும், சாவித்திரிக்கும் பொறாமை?

தீசல்கள்....

ஆங்காரத்தில் வெம்பிச் சாகும் சனியன்கள்.

பணம் இருந்தால் ஆயிற்றா...

"பார்வதி......ஈ..."

"டீ...பார்வதி..."

உள்ளே வேகமாய் வந்த கமலம் நின்றாள். கண்களை இடுக்கிக் கொண்டு அதட்டலாய்க் கேட்டாள்.

"இங்கதான் இருக்கியா? தொண்டைத் தண்ணி வத்த காமணியா கூப்பிடுடறது காதுல விழலை?"

"விழலை..."



"அடி செருப்பால... எது வளர்ந்திருக்கோ இல்லையோ, வாய் வளர்ந்திருக்கு அரை முழத்துக்கு. சமைஞ்சு நின்னுட்டு இருக்காம, முன் வீட்டுக்கு ஓடு... கல்யாணிம்மாவோட தங்கச்சியும், குழந்தைங்களும் டிபனுக்கு வர்றேன்னு சொல்லி இருக்காங்க. தேங்காய் பர்பி பண்ணலாம்னு இருக்கேன். வந்து ரெண்டு தேங்காய் உடைச்சி துருவிக் கொடுத்திட்டுப் போ..."

பார்வதி உதட்டைச் சுழித்தாள்.

"என்னால முடியாது... பென்ஸில் சீவறப்போ கைல வெட்டிக்கிட்டது வலிக்குது..."

"நல்லா வலிக்கட்டும்... இன்னும் கொஞ்சம் கூட வலிச்சா தப்பில்லே... கண்ணாடி முன்னே நின்னு அழகை ரசிச்சுகிட்டு இருக்காம, கிளம்பு... ம்ம்..."

"எனக்கு அழகு இருக்கு, ரசிக்கிறேன்... உனக்கென்ன?"

"இப்படிப் பட்டுப் பட்டுனு பதில் பேசாதேனு எத்தனையோ தரம் சொல்லியும் ஏண்டி காதுல வாங்காம இருக்கே? ஒரு சமயக்காரி பொண்ணுக்கு ஆனாலும் இத்தனை வாய், திமிர் கூடாதுடிம்மா..."

"பின்னே? கல்யாணிம்மாகிட்டயும், மத்தவங்க கிட்டயும் ஈ-னு எப்பப் பாரு இளிச்சிகிட்டு நீ அடங்கிப் போறியே, அப்படி இருக்கணும்னு சொல்லறியா?"

கமலம் சுவரில் சாய்ந்து கொண்டு சின்னதா பெருமூச்சொன்றை வெளியேற்றினாள்.

"தணிஞ்சு போகக் கொண்டுதான் இந் அளவுக்காவது இருக்க இடம், தின்னச் சோறு நாம மானமா இருக்க முடியுது, பார்வதி... அ நினைவுல வைச்சிக்க."

"பெரிய்ய இடம்... பெரிய்ய்ய்ய சோறு! கா ஷெட்டும், அவங்க தின்ன மிச்சம் மீதியும்...தத்... உரக்கச் சொல்லாத கேட்கறவங்க பைத்தியம்னு சிரிப்பாங்க..."

இவளுடன் வாய் கொடுத்துக் கொண்டிருப் பதற்கு இப்போது நேரம் இல்லை என்று தீர்மானித்த கமலம் அதட்டினாள்.

"பேசினது போதும்... வர வர உனக்கு அதிகப் பிரசங்கித்தனம் ஜாஸ்தியாயிட்டது. உன் கிட்ட அப்புறமா பேசற விதத்துல பேசிக்கிறேன்... இப் முதல்ல என் பின்னாலியே ஒழுங்கா வந்து சேரு... பொம்பளையா லட்சணமா, அடக்க ஒடுக்கமா இல்லாம, இன்னொரு தரம் கண்ணாடி முன்னால நிக்கறதைப் பார்த்தேன், அவ்வளவுதான்—என்ன நடக்கும்னு எனக்குத் தெரியாது... ஆமா..."

பேசிக் கொண்டே அவள் வேகமாய் வெளியில் செல்ல, பார்வதி அங்கேயே நின்று கீழ் உதட்டை மடித்து அழகு காட்டினாள்.

கடைசித் தரமாகக் கண்ணாடியில் தன் பிம்பத்தை இன்னொரு தரம் பார்த்துக் கொண்ட போது, ஆத்திரம் நசநசவென்று துளிர்த்தது.



... அம்மாவாம்... அம்மா... மூஞ்சியப் பாரு! க...டிப் போன தாவாங்கட்டையும், கொத்தவரங்காய் ய...தல் மாதிரி உடம்பும்... நாற்பது வயதில் கிழவி ...ல வளைய வரும் இவள் மாதிரி தானும் இருக்க வேண்டுமா? ஏதுடா, நாம் இப்படி அசிங்கமாய் இருந்தாலும், மகளாவது பளிச்சென்று நாலு பேர் கண் படும்படி அழகாய் இருக்கிறாளே என்று பெருமைப் படாமல்... தத்... என்ன அம்மா வேண்டிக் கிடக்கிறது?....

ஒரு நிமிஷம் அப்படியே நின்று முணு முணுத்தவள், மனசில்லாமல் கண்ணாடியை விட்டு வாசல் பக்கம் நகர்ந்தாள்.

கமலம் பொறுக்கிற வரைக்கும்தான் பொறுப் பாள்; அளவு மீறினால் அவள் வாய் பேசாது. கை செமத்தியாப் பேசும். கை மட்டும் என்றில்லை. கையில் கிடைப்பது எதுவானாலும், விறகுக் கட்டை, விசிறிக் காம்பு என்று ஒன்றையும் விட்டு வைக்க மாட்டாள் என்பதை அனுபவ ரீதியாகப் பார்வதி உணர்ந்திருந்ததால் முகத்தைச் சட்டி மாதிரி வீங்க வைத்தபடி, தோட்டத்தில் கொஞ்சம் நடந்து, பெரிய வீட்டின் புழக்கடை வாசல் வழியாக உள்ளே சென்றாள்.

கமலம் பூர்வ ஜன்மத்தில் ஆனாலும் ரொம்பத் ...விட்டுப் பே...ண்ணி இருக்க வேண்டும்! பிறந்த வருஷங்களை...ல்லாம் தாயை விழுங்கிய பெருமை கமலம் சமாளித்த...

மூன்று வயசாகும் போது அ... மண்டையைப் போட்டு விட்டார்.

வயற்காட்டிற்குப் போனாராம், வரப்பே... வத்ந... படுத்திருந்த நல்ல பாம்பைப் பார்க்காமல் மிதித்து விட்டாராம். அது ஒரே போடாய்ப் போட்டதில் வீட்டுக்குக் கொண்டு வருவதற்குள் உடம்பு நீலம் பாரித்து, வாயில் நுரை தள்ள, மனுஷன் போய்ச் சேர்ந்து விட்டாராம், சொல்லுவார்கள்.

ஆக, அம்மா, அப்பா முகங்களை நிழலாகக்கூட நினைத்துப் பார்க்கத் தெரியாமல், அண்ணன் அண்ணியால் கமலம் வளர்க்கப்பட்டாள்.

பள்ளிக் கூடத்தில் மழைக்குப் பயந்து கொண்டு கூட ஒதுங்கியதில்லை.

இவளுக்குப் பதினைந்து வயசாகையில் தள்ளி விட்டால் போதும் என்கிற ரீதியில் ஒரு கல்யாணம்.

மாப்பிள்ளை வேதாசலத்துக்குக் கல்யாணங் களில் சமைக்கும் உத்தியோகம். வயசு அப்படி யொன்றும் அதிகமில்லை; நாற்பத்து ஏழுதான்.

மூத்த தாரத்தைப் பத்து வருஷங்களுக்கு முன் பறிகொடுத்து விட்டு பிள்ளை குட்டி இல்லாமல் தாம்பத்திய வாழ்க்கை போதும் என்று வாழ்ந்து கொண்டிருந்தவரை எப்படியோ நைச்சியம் பண்ணி, சின்னப் பெண்ணைக் கண்ணிஷ்டியில் தன் ஆசையைக் கிளப்பி, கல்யாணத்துக் கொண்ட விட்டார்கள். ...ளிர்த்தது.



கெ... பத்து வருஷங்களாக வேண்டாம் என்று ஒதுக்கி கல்...ந்த பெண்மையை, அதன் இனிமையை யா...டும் உணர்ந்ததில், ஒரு விதப் போதை ...டாக, கமலத்தை மனிதர் நிறையவே படுத்தி இருக்கிறார்.

பதினாறரை வயசில் கமலத்துக்கு மீனாட்சி பிறந்தாள்.

அப்புறம் இரண்டு குறைப் பிரசவங்கள். அதற்கப்புறம் பிறந்த ஒரு பிள்ளையும், பெண்ணும் அறைக்குள்ளேயே இன்ன காரணம் என்று புரியாமல் செத்துப் போயின.

கிட்டத்தட்ட பத்து வருஷங்கள் கழித்துப் பிறந்த பார்வதி மட்டும் எப்படியோ கட்டி முட்டியாய்த் தங்கிவிட்டாள்.

பார்வதிக்கு ஐந்து வயசாகும்போது ஆபட்ஸ் பரியில் ஒரு கல்யாணத்துக்குச் சமைக்கப் போன வேதாசலம் திடுமென, 'மார் வலிக்குது; தலையைச் சுத்துது... சுக்குத் தண்ணி வைச்சி கொண்டா!' என்றபடி வீட்டுக்கு வந்தார். சுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்குள் தலை தொங்கி விட்டது. அத்தனை சுலபமான மரணம்.

புருஷன் ஓரளவுக்கு வசதி செய்து வைத்திருந்து விட்டுப் போயிருந்ததற் கொண்டு முதல் நாலைந்து வருஷங்களை அத்தனை கஷ்டம் தெரியாமல் கமலம் சமாளித்தது நிஜம்.

மீனாட்சியை ஒருத்தனிடம் ஒப்படைத்து விட்டால் பொறுப்பு முடியும் என்ற எண்ணத்தில் இங்கு சொல்லி அங்கு சொல்லி செங்கல்பட்டில் ஒரு தனியார் பஸ் நிறுவனத்தில் க்ளார்க்காக இருந்த நடராஜனைப் பிடித்து அவன் கேட்ட சீர்வரிசைகளைத் தன் சக்திக்கு மீறிச் செய்து, பெண்ணையும் கொடுத்தாள்.

நடராஜனுக்கு ஆனாலும் ஆசை அதிகம். புருஷன் இல்லாத பெண்மணி ஆயிற்றே. கீழ்க் கடை இன்னொன்று இருக்கிறதே என்ற கரிசனம் எல்லாம் இல்லாமல் சதா 'இதை வாங்கிக் கொண்டுவா, அதை வாங்கிக் கொண்டுவா' என்று பிறந்தகத்துக்கு மனைவியை விரட்டி, கமலத்தின் கழுத்தை ஒட்ட அறுத்தவன். மூன்று, நாலு வருஷங்களில் கறப்பதற்கு மாமியாரிடம் இனி எதுவும் இல்லை என்பது புரிந்த பிறகு, உங்கள் சகவாசமே எங்களுக்கு வேண்டாம் என்று சுத்தமாக ஒதுங்கிக் கொண்டான்.

புருஷன் சேர்த்து வைத்த பணமும், ஓட்டு வீடும் மூத்தவளுக்குக் கல்யாணம் பண்ணுவதிலும் தொடர்ந்து வந்த பண்டிகைகளுக்குச் சீர் செய்வதிலுமே கரைந்து போக, அடுத்து வந்த நாள்களில் சோத்துக்கு என்ன பண்ணுவது என்று புரியாமல் தவித்து, கமலம் வீட்டில் இருந்தபடி அப்பளம், வடகம், ஊறுகாய், பலகாரங்கள் செய்து விற்றுப் பார்த்து, அந்த வருமானமும் போதாமல் போக, என்ன செய்வது என்று கையைப் பிசைந்து



கொண்டிருந்த வேளையில் நல்ல காலமாக கல்யாணி அவளைத் தன் வீட்டோட சமையற்காரியாக இருக்க அழைத்தாள்.

கல்யாணி—சதானந்தம் ஜோடிக்குப் பிள்ளை குட்டி என்று எதுவும் இல்லை. சதானந்தம் வக்கீல் தொழிலில் சுமாராகச் சம்பாதிக்கிறார் கல்யாணி நிரந்தர ஆஸ்த்மா நோயாளி என்பதால், வீட்டோடு பொறுப்பாக ஒரு ஆள் இருந்தால் தேவலை என்ற நினைப்பில் கார்ஷெட்டை ஒழித்துக் கொடுத்து இவர்களை இருக்கச் செய்ததில், இந்த நாலைந்து வருஷங்களாக, ஒருத்தரிடம் போய் நின்றோம், கை நீட்டி உதவி கேட்டோம் என்ற தாழ்வுணர்ச்சி இல்லாமல், உழைத்து கௌரவமாகச் சாப்பிடும் தெம்போடு கமலம் வாழ வழி பண்ணியிருக்கிறார்கள்.

"ஆச்சா பார்வதி? ரெண்டு தேங்காய் துருவ, எத்தனை நாழி? ம்?"

"துருவித்தானே ஆகணும்! எனக்கு என்ன பத்து கையா இருக்கு?"

"கையிலே காரியம் கிடையாது... பதில் மட்டும் சபக் சபக்குனு ரெடியா பேசிடு... மார் தாவணியை ஒழுங்கா போட்டுக்கோடி.... கல்யாணிம்மா வந்திடப் போறாங்க..."

"வந்தா என்னம்மா! நானும் அப்ப பிடிச்சி பார்க்கறேன், ஆடு மாடை விரட்டற மாதிரி விரட்டிக் கிட்டே இருக்கியே? கல்யாணிம்மா வந்தா என்ன?

அவங்களுக்கு இருக்கிறதுதானே எனக்கும் இருக்கு? வரட்…"

அவள் மேலே பேசுவதற்குள் கமலம் கைக் காரியத்தை விட்டு விட்டுப் பாய்ந்து எழுந்து வந்தாள். வலது கையால் நக்கென்று ஓங்கி மகளின் தலையில் குட்டினாள்.

"சொல்லச் சொல்ல மட்டு மரியாதை இல்லாம பேசிக்கிட்டே போனா என்னடி அர்த்தம்… வாய மூடு… பட்டி வாய மூடு…"

இன்னொரு தரம் வலிக்க குட்டி, குனிந்து, பக்கத்தில் கிடந்த கரண்டிக் காம்பை எடுத்து ஓங்குவதற்குள் பார்வதி வேகமாய் எழுந்து நின்றாள்.

"கொன்னுடு… அடிச்சி அடிச்சே என்னைக் கொன்னுட்டு, நீ நிம்மதியா இரு."

ஆங்காரத்தோடு பேசியவள், கையிலிருந்த தேங்காய் மூடியை வீசிவிட்டுச் சட்டென்று திரும்பி, வெளியில் ஓட, அந்தக் கத்தல், விசும்பல் காதில் விழுந்த தினுசில் கல்யாணியம்மா சமையலறையில் எட்டிப் பார்த்தாள்.

"என்ன அமர்க்களம், கமலம்?"

"ஓ…ஒண்ணுமில்லேம்மா…"

கண்களைக் கீறிக் கொண்டு எழுந்த நீரை அடக்க முயன்று, தோற்று, கமலம் தலையைக் குனிந்துகொள்ள, கல்யாணி அருகில் வந்து பரிவுடன்



வினவினாள். "என்ன நடந்துச்சு, கமலம்…வழக்கம் போலப் பெண்கிட்டே தகராறுதானே?"—

பதில் கூறாமல் கமலம், வாரி இறைந்து கிடந்த தேங்காய் மூடிகளையும், துருவல்களையும் திரட்டினாள்.

"இன்னிக்குப் பார்வதிக்குப் பள்ளிக்கூடம் கிடையாதா?"

"இல்லேம்மா…சும்மானாலும் வெட்டியா வீட்டுலே பொழுதைப் போக்கறாளேனிட்டு, இங்க வந்து கூடமாட ஒத்தாசை பண்ணுனு 'சொன்னேன். பண்ணின லட்சணம் இது… இவளைப் பெத்த வயத்திலே பிரண்டையை வைச்சித்தான் கட்டிக் கணும் போல இருக்கு…"

"அவதான் ரெண்டாங்கெட்டான்னு தெரியும் இல்லே… எதுக்காக அவ வழிக்கு அனாவசியமா போறே?"—

"பொம்பளையா பொறந்தவளுக்குக் குனிஞ்சி, நிமிர்ந்து காரியம் பண்ணத் தெரிய வேணாம்மா? இப்ப கத்துக்காட்டி, நாளைக்கு ஒருத்தன் வீட்டுக்குப் போயி கரண்டி பிடிச்சி சமைக்கறது எப்படி? சொல்லுங்க… நானும் கெஞ்சிப் பார்க்கிறேன், கொஞ்சிப் பார்க்கிறேன், அதட்டி மிரட்டறேன். ஒண்ணுத்துக்கும் பணிய மாட் டேன்னு அழும்பு பண்ணினா கோபம்தான் வருது…"

"விடு… வயசு வந்தா தானே சரியாயிடுவா."—

"இப்ப மட்டும் குழந்தையாம்மா? பதினைஞ்சி பொறந்திடுச்சி... இவளை நினைச்சா ராத்திரித் தூக்கம் கூட வரமாட்டேன்குதும்மா..."

சொச்ச தேங்காய் மூடிகளையும் துருவிக் கொண்டு எழுந்து நின்ற கமலத்தின் கண்களில் பயத்தின் காரணமாக நீர் திரண்டு போக, "அய்யே... இதென்ன அசட்டுத்தனம்..." என்றாள் அவசரமாய்க் கல்யாணி.

"அசட்டுத்தனம் இல்லேம்மா... உண்மையா ரொம்பத்தான் கலவரமா இருக்கு... எனக்குத் திடும்னு ஏதாச்சும் ஆயிடுச்சின்னா, இந்தப் பொண்ணுக்கு என்ன வழின்றதை நினைச்சிட்டா தேகம் ஆடிப் போகுது. அக்காக்காரி சரியான மண்குதிரை; நம்பி பிரயோஜனம் இல்லே... இந்த மூதேவியும் அடக்க ஒடுக்கமா இருந்து, காரியங் களைக் கத்துக்கிட்டாலும் தேவலை. எங்க? ஒண்ணுத்துக்கும் வக்கு இல்லாம, கண்ணாடி முன்னால நின்று சினிமா பாட்டைப் பாடிக்கிட்டு, தன் அழகைப் பார்த்துக்கிட்டே நிற்குறதே தவிரவும்... மொத்தத்துல நா ரொம்ப பாவம் பண்ணியிருக்கேம்மா..."

வழக்கத்துக்கு மாறாக அவள் நிறையப் பேசி, நிறையக் கவலைப் படுவது, கல்யாணிக்குச் சங்கடத்தைத் தந்திருக்க வேண்டும்.

ஆறுதலாகப் புன்னகைக்க முயன்றாள்.

"யாருமே இல்லாத மாதிரி என்ன புலம்பல் இது, கமலம்? நாங்கள்ளாம் உன் கண்ணுக்கு



மனுஷங்களாத் தோணலியா? ம்? அஞ்சு வருஷமா உங்களை வைச்சி காப்பாத்திட்டு, உன் கையால ரெண்டு வேளையும் சோறு தின்னிட்டு, உனக்கு ஒண்ணுன்னா உன் மகளை அம்போனு விட்டுடுவோம்னா நினைச்சே...? சத்தியமா விட மாட்டேன்... கவலைப்படாதே... ஆமா, என்னாச்சு உனக்கு இன்னிக்கு? இப்படி நீ வருத்தப்பட்டுக் கறதை யாராவது கேட்டாங்கன்னா, நாற்பது வயசுலே எண்பது வயசு கிழவியாட்டம் என்ன கவலை, பேச்சு இதுனு கேலி பண்ணப் போறாங்க..."

அஸ்வினி தேவதைகள் அந்தக் கணத்தில் அங்கு 'எனக்குத் திடும்னு ஒண்ணுஆயிட்டதுன்னா' என்று கமலம் பேசிய போது, 'உன் விருப்பப்படியே ஆகட்டும்!' என்று ஆசிர்வதித்திருக்க வேண்டும்—

இல்லாவிட்டால் மறுநாள் நடந்த அந்தச் சம்பவத்திற்கு வேறு எதைத்தான் காரணமாகச் சொல்வது?

நம்பினால் நம்புங்கள்; விட்டால் விடுங்கள்.

எஜமானியின் மனுஷ்யத்தனம் நிறைந்த பேச்சைக் கேட்டு அந்த நிமிஷம் கமலம் சமாதான மாகி விட்டாலும், சரியாக அடுத்த இருபத்து நாலு மணி நேரத்திற்குள்தான், கிணற்றடிப் பாசியில் வழுக்கி விழுந்தாள்; மயக்கமுற்றாள். உள்ளுக்குள் ரத்தக் கசிவு உண்டாகி, மயக்கத்திலிருந்து மீண்டு வராமலேயே செத்துப் போனாள்.

## 2

மணையில் அரிசியைப் பரப்பிக் கொண்டு குந்தி உட்கார்ந்தபடி கல் பொறுக்கிக் கொண்டிருந்த மீனாட்சி, தலையை நிமிர்த்தி, சற்றே பின்னால் சாய்ந்து, ஸ்ஸப்பாடி...என்று பெருமூச்சு விட, முதுகுத் தண்டில் சதக்கென்று வலி மின்னலாய் நிமிண்டியது.

தாள மாட்டாமல் ம்மா...என்று வாய்விட்டுப் புலம்பியவள், கீழ் உதட்டைக் கடித்துத் தன்னை ஆஸ்வாசப் படுத்திக் கொள்ளப் பார்த்தாள்.

வலியின் நெருடல் கண்களில் வெளிப்பட்டது.

திரண்டு விட்ட நீரை அடக்கும் பாவனையில் மூக்கை உறிஞ்சி, கண்களை இரண்டு தரம் சிமிட்டினாள்.

இருக்கிற அவஸ்தை போதாது என்று இது ஒன்று—

குனிந்தோம், நிமிர்ந்தோம், ஓடியாடி வேலை செய்தோம் என்று இல்லாமல் இது ஒரு பெரிய ரோதனை!

பெருக்கினோம், பத்துத் தேய்த்தோம் என்று காரியத்தைச் செய்துவிட்டுப் பளிச்சென்று நிமிர முடியாது; வலி உயிரைத் திருகிவிடும். கூனக்கிழவி மாதிரி அப்படியே சில நிமிஷங்களுக்கு இருந்துவிட்டு மெள்ள மெள்ள நிமிர வேண்டும்.



மூன்றாவது பிரசவம் ஆனதிலிருந்து பிடித்துக் கொண்ட சனியன் இது!

ஏன்?

இரண்டாவது பிரசவம் மட்டும் என்ன வாழ்ந்தது?

முதலாவதற்கு அம்மா வீட்டில் இருந்ததால் அத்தனை கஷ்டம் இல்லை.

நாற்பத்தைந்து நாட்கள் வரை சட்டி தொடாமல் இருந்து உடம்பைப் பார்த்துக் கொண்டதில் பிரச்சனைகள் என்று எதுவும் எழவில்லைதான்.

ஆனால் இரண்டாவதற்கு அப்படி இல்லை. மாமியார் மேல் கோபம் உண்டாகி விட்ட தருணம் என்பதால் நடராஜன் பிறந்த வீட்டுக்கு அனுப்ப மறுத்துவிட, பெத்த கடமைக்குக் கமலம் இங்கு வந்து ஒரு மாசம் போலத் தங்கி உதவி செய்தாலும், உடம்பு தேறும் முன் ஈரத்தில் நின்று வேலை பார்க்கத் துவங்கி விட்டதில், என்னென்னவோ கோளாறுகள் தேகத்தில் புகுந்து கொள்ளவே செய்தன.

ஓயாத உதிரப் போக்கு....

நாலு நாளுக்கொரு தரம் தலைவலி...

சதா படுக்க வேண்டும் போல ஒரு பலவீனம்.

இத்தனைக்கும் பிரமாதமாய் எந்த விதத்திலும் வைத்தியம் பார்க்காததோடு, மூன்றாவது உண்டானதும் அவள் அனுபவித்த அவலத்தைக் கேட்க வேண்டுமா?

பிறந்த வீட்டுப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கக் கூடாது என்று புருஷன் உத்தரவு போட்டு விட, யாரும் இல்லாத அனாதை மாதிரி முனிசிபல் ஆஸ்பத்திரியில் குழந்தையைப் பெற்றுவிட்டு, ஐந்தாம் நாள் வீட்டுக்கு வந்து அத்தனை வேலைகளையும் பச்சை உடம்போடு செய்ததில்...

இந்த முதுகுவலி...

தலைச் சுற்றல்...

கிள்ளி எடுக்கச் சதை இல்லாமல் தேய்ந்து போன உடம்பு...

ஹூம்...

நாலு மணிச் சங்கு ஓசை காதில் விழ, மீனாட்சி பெருமூச்சு விட்டபடி மெதுவாக எழுந்திருந்தாள்.

அரிசியைத் திரட்டி ட்ரம்மில் போட்டாள். தூக்க முடியாது என்பதால், காலால் நகர்த்திச் சென்று ஓரமாய் வைத்தாள்.

ரேஷனில் வாங்கிய ஆறு கிலோ அரிசி...

இதை வைத்துக் கொண்டு வாரம் முழுவதும் ஓட்டியாக வேண்டும்.

இரண்டு நாளாக பள்ளியிலிருந்து வீடு திரும்பும் கலாவும், மாலதியும், 'வெறும் காபி மட்டும்தானா? டிபன் எதுவும் செஞ்சி வைக்கலியா?' என்று சிணுங்கியது நினைவுக்கு வர, என்ன செய்யலாம் என்று யோசனை பண்ணினாள்.



உளுந்து எக்கச்சக்க விலையில் விற்றாலும் பரவாயில்லை என்று இட்லி, தோசைக்கு அரைத்து வைத்திருந்தால் கவலை இல்லை...எங்கே? பாழும் உடம்பு இடம் கொடுத்தால்தானே?

டப்பாக்களைத் திறந்து பார்த்தாள்.

நொய் இருந்தது.

நொய்ப் பொங்கல் செய்தால் என்ன?

இலுப்பச் சட்டியை ஸ்டவ்வில் ஏற்றித் தாளிக்கையில் மீண்டும் இடுப்பை வலி முறுக்க, அழுகை எழுந்தது.

தனியார் ஆஸ்பத்திரியில் பெரிய டாக்டரிடம் காட்டி, பத்து நாள் மருந்து சாப்பிட்டால் நிச்சயம் பலன் இருக்கும்.

இந்த மனுஷர், தானும் அழைத்துப் போக மாட்டார்; என்னையும் செல்ல விடமாட்டார்.

"அ? பெரிய டாக்டர் கிட்ட போகணுமா? ஏன், கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போனா மகாராணி கௌரவம் குறைஞ்சிடுமோ?"

"அங்க சரியா கவனிக்கவே மாட்டேங்கறாங்க... என்ன உடம்புனுகூட விசாரிக்காம, ஏதோ ஊசி போட்டு, கலர் கலரா நாலு மாத்திரைய கொடுக்கறாங்க...மூணு வருஷமா அங்கதான் வைத்தியம் பண்ணிக்கறேன். இன்னும் கோளாறு அத்தனையும் அப்படியேதானே இருக்கு!"

"அது உன் முகரக்கட்டை ராசி. தேவாங்கு மாதிரி உடம்பும், வியாதியும் உங்க பரம்பரைச் சொத்தாச்சே...உன்னைப் பெத்தவ எப்படியோ, அப்படித்தானே நீயும்! இதுக்குத் தண்டத்துக்குக் காசு செலவழிச்சி பெரிய டாக்டர் கிட்ட வைத்தியம் வேற பார்க்கணுமா? போ...போ...கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போறதுனா போ, இல்லே...வீட்டி லேயே பேசாம கிட. உனக்கும்...உன் வியாதிக்கும் வாரி விட இங்க ஒண்ணும் கொட்டிக் கிடக்கலை...'

குழந்தைகளுக்கும் எனக்கும் ஒரு காசு செல வழிக்க மனம் கிடையாது; வீட்டுக்குச் சாமான் வாங்கிப் போடக் கூட சிடுசிடுப்புத்தான்.

ஆனால், தான் சீட்டு ஆடவும், சிகரெட் பிடிக்க வும், நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு இங்கே அங்கே குஷாலாகப் போகவும் காசு கொட்டித்தான் கிடக்கும்!

பொங்கலைக் கிளறும்போது மொண்ணையாய் இருந்த கை, பார்வையில் பட, மீனாட்சியின் துக்கம் அதிகமானது.

சீட்டுக் கச்சேரி மோகத்துக்குக் கடைசியாகக் கொடுத்த பலி.

நாலைந்து வருஷங்களில் அம்மா சீதனமாகச் செய்து போட்ட இரட்டை வடச் சங்கிலி, கல் தோடு, மூக்குத்தி என்று எல்லாவற்றையும் வாரிக் கொடுத்து விட்டு, உருப்படியாய்ப் பாக்கி நின்றது, இந்த ஒரு ஜதை வளையல்தாம்.



அதுவும் போன வாரம் போய்விட்டது.

மாட்டேன் என்று முதலில் மறுத்ததற்குக் கிடைத்தது மு ' த்தில் ஒரு குத்து.

உள் மூக்கு உடைந்து போய் ரத்தமான ரத்தம் கொட்டி, நாலு நாட்களுக்கு மூக்கு குடமிளகாய் மாதிரி வீங்கி அவஸ்தைப்பட்டதுதான் மிச்சம்.

"அம்மா..."

பக்கத்து போர்ஷனில் விளையாடிக் கொண் டிருந்த மூன்று வயசு கீதா வீடு திரும்பிக் காலைக் கட்டிக் கொண்டு அழைக்க, மீனாட்சி, "என்னடி?" என்றாள் அலுப்புடன்.

"பசிக்கறதும்மா..."

"அதான் கூப்பிடாம வந்திடுமே. டிபன் செஞ்சிட்டிருக்கேன். நீ போய்க் கலாவும், மாலாவும் வராங்களான்னு பாரு..."

வாசலுக்கு ஓடின கீதா, இரண்டு நிமிஷங்களில் முன் போர்ஷன் சுகுணா தொடர மீண்டும் உள்ளே வந்தாள்.

"அக்கா, வாசலுக்கு வாங்க... தந்திக்காரரு வந் திருக்காரு... உங்களுக்குத் தந்தி வந்திருக்குதாம்..."

"த...தந்தியா? எ...எனக்கா?"—

பொங்கலை இறக்கி வைத்துவிட்டு, ஸ்டவ்வை அணைக்காமல், வாசலுக்கு வேகமாய் வந்து, கையெழுத்துப் போடச் சொன்ன இடத்தில்,

கோணலும் மாணலுமாய் மீனாட்சி என்று எழுதி, தந்தியை வாங்கினபோது உடம்பு உதறி உதறிப் போட்டது.

"எ... எனக்கு ஒண்ணுமே புரியலை... மயக்கமா வருது... த... தந்தி யாரு அடிச்சிருக்காங்க? நீ பாரு சுகுணா..."

மீனாட்சி பரிதவிக்க, சுகுணா தந்தியைப் பிரித்தாள், படித்தாள்.

'கமலம் இறந்து விட்டாள். உடனே வரவும். சதானந்தம்.'

வாசகத்தைச் சுகுணா படித்து முடிப்பதற்குள் கண்கள் இருட்டிக் கொண்டு வர, ஹ்ருதயத்தின் இரைச்சல் காதில் அலற, கால்கள் நிற்க மாட்டாமல் துவண்டு போக, புளியம்பழம் மாதிரி பொத்தென்று அங்கேயே மீனாட்சி மயங்கி விழுந்தாள்.

அன்றிரவு, வழக்கம் போலத் தன் சீட்டுக் கச்சேரியை முடித்துக் கொண்டு எண்பது ரூபாய் வரைக்கும் தோற்று விட்ட எரிச்சலுடன் நடராஜன் வீட்டுக்கு வந்தபோது மணி எட்டே கால்.

இவன் போர்ஷனில் சின்னதாகக் கூட்டம்.

குரல் எடுத்து அழும் மீனாட்சி.

"என்ன நடராஜன், எங்க போயிட்டுச் சாவகாசமா வர்றீங்க? நாங்களும் ஆபீஸ், நீங்க சீட்டாடற க்ளப்னு எல்லா இடத்துக்கும் ஆள் அனுப்பி பார்த்திட்டோம்...எங்கவுமே காணுமே!"



பதற்றத்துடன் பேசிய மூர்த்தியை— சுகுணாவின் புருஷனை—கண்களை இடுக்கிக் கொண்டு நடராஜன் ஏறிட்டான்.

"என்ன விஷயம்? எதுக்காக இவ இந்தக் கூப்பாடு போட்டு, கூட்டத்தைச் சேர்த்திருக்குறா?"

"அவங்கம்மா தவறிட்டதா சேதி வந்திருக்கு, நடராஜன். நாலரை மணிக்குத் தந்தி வந்திச்சு..."

"ஓ!"—ஒரு நிமிஷம் அப்படியே நின்று, சாவகாசமாய் நடராஜன், "அதுக்கென்ன இப்போ?" என, மூர்த்தி அதிர்ந்தான்.

"அதுக்கென்னவா? உங்களை விட்டா பெரிய வங்களா வேற யார் இருக்காங்க? உடனே கிளம்பிப் போய் ஆக வேண்டியதை..."

அவனை முடிக்க விடாமல் நடராஜன் கோபமாய்க் குறுக்கிட்டான்.

"மூர்த்தி...யாருக்கு, எப்ப, என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும்...நீங்க உங்க பெண்டாட்டிய கூட்டிக்கிட்டு வீட்டுக்குப் போய், சாப்பிட்டு, படுக்கறதைப் பாருங்க...என்ன?..."

முகத்தில் அறைந்த மாதிரி அவன் பேச, அவமானத்தால் சுருங்கிப் போன மூர்த்தி, மனைவி பக்கம் திரும்பி 'வாடி' என்று உறுமிவிட்டு வேகமாய் வெளியில் நடந்தான்.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பது போல, பாக்கி நின்ற . ஓரிருவருங்கூடத் தம் தம்

போர்ஷனுக்கு அவசரமாய் நகர, மீனாட்சி நிலைமை புரிந்து பெரிசாய் அழ முற்பட்டாள்.

"என்னங்க ... என்னங்க ... அம்மா ... ஆ... ஆ..."

நடராஜன் அவளருகில் பாய்ந்து சென்று தோளைப் பிடித்து உலுக்கினான்.

"மூடுடி வாய... இன்னொரு தரம் சத்தம் வெளில கேட்டுச்சோ, ஒரேடியா குரல் வளைய பிடிச்சி அமுக்கிடுவேன் ... மூடுடீ... பெரிய்ய அம்மா... என்னைப் பொறுத்தவரை அவ செத்துப் போய் நாலு வருஷம் ஆச்சு...புரியுதா? வாய மூடிக்கிட்டு போய்த் தட்டு போடு...பசிக்குது..."

மீனாட்சி தாள மாட்டாமல் பட்பட்டென்று மார்பில் அடித்துக் கொண்டாள்.

"அய்யோ... அய்யோ...இப்படிப் பேசாதீங்க! எனக்குத் தாங்கலை... ஆயிரம் கோபதாபம் இருந்தாலும், அவங்க என்னைப் பெத்தவங்க. கிளம்புங்க...தயவு பண்ணி என்னைக் கூட்டிட்டுப் போயி, காரியத்தைக் கவனிங்க...நம்மளை விட்டா அவங்களுக்கும் வேற யாரு? அய்யோ தங்கச்சி... என்ன பண்ணுதோ? ஒண்டியா எப்படித் தவிக்குதோ...?"

மீனாட்சியின் குமுறல் காதில் விழாத மாதிரி நடராஜன் சட்டையை அவிழ்த்து மாட்டினான். நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான்.



அவனுடைய அலட்சியப் போக்கு ஏகத்துக்குப் பயத்தைக் கிளப்ப, மீனாட்சி அவன் காலைப் பற்றியபடி தேம்பி அழுதாள்.

"வேணாங்க ... இவ்வளவு கல் மனசோட இருக்காதீங்க...கிளம்புங்க...."

"என்ன முட்டிக்கிட்டு அழுதாலும் நா வரப் போறதில்ல... அப்புறம்...?"

"பிடிவாதம் பண்ணாதீங்க...இந்த ஒரு முறை மட்டுங்க... அய்யோ, நாம போகலைனா ஊர் சிரிச்சிடுங்க..."

"சிரிக்கட்டும். எனக்குக் கவலை இல்லே..."

"என்னை உதைங்க, அடிங்க, இப்படி வதைக்கறது மட்டும் வேணாங்க...பெத்தவளைக் கடைசியா ஒரு தரம் பார்க்க மட்டும் அனுமதி தாங்க; உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். அய்யோ... அம்மா...ஆ..."

நடராஜன் எரிச்சலுடன் அவள் முடியைப் பற்றி நிமிர்த்தினான்.

"சரி, உனக்குப் போகணும், அதானே? ஒழி. ஆனா ஒண்ணு... போயிட்டுத் திரும்பறப்போ, உங்கம்மா போட்டுக்கிட்டிருந்த நகை, சேர்த்து வைச்சிருக்கிற பணத்துல பாதி கொண்டு வரணும்... இதுக்குச் சம்மதம்னா நீ மட்டும் புறப்பட்டுப் போ... என்ன புரியுதா?"—

தாயின் இறுதி முகமுழி கிடைக்குமா, கிடைக்காதா என்ற பதற்றத்தில், வேறு எந்த நினைப்பும் இல்லாத நிலையில், அவன் போட்ட விதிகளுக்குச் சரி, சரி என்று தலை ஆட்டினவள், இரவு மணி பத்தை நெருங்கி விட்டபடியால், விடிய விடிய மூலையில் உட்கார்ந்து அழுது புலம்பிவிட்டு, காலை முதல் பஸ்ஸில் கீதாவுடன் சென்னைக்குச் சென்று, சதானந்தத்தின் வீட்டுப் படி ஏறியபோது, கமலத்தின் காரியங்கள் முடிந்து அரை நாளாகியிருந்தது.

# 3

ஒரு பக்கமாய் உட்கார்ந்து, வந்து இறங்கின இந்த இரண்டு மணி நேரமாய் வாய் ஓயாமல் தேம்பித் தேம்பி அழும் மீனாட்சியைப் பார்த்தால் கல்யாணிக்குப் பாவமாக இருந்தது.

அழுது துக்கத்தைக் கரைத்துக் கொள்ளட்டும் என்று இது நாழிகை சும்மா இருந்தது போலத் தொடர்ந்து இருக்க முடியாது என்ற எண்ணத்துடன் கிட்டத்தில் வந்து அமர்ந்தாள்.

"மீனாட்சி—என்னைப் பாரும்மா..."

"......"

"இப்படி அழுதா, போனவ வந்திடப்போறாளா? மனசைத் தேத்திக்க, மீனாட்சி..."



"எ...எப்படிம்மா? பெத்த தாயோட முகத்தைக் கடைசியா பார்க்கற அதிருஷ்டம்கூட இல்லேன்றதை நினைக்குறப்போ, நெஞ்சு வெ...வெடிச்சுடும் போல இருக்கும்மா..."

கல்யாணி வருத்தத்துடன் சூள் கொட்டினாள்.

"நீ இந்தத் துடிப்பு துடிப்பேனு தெரிஞ்சிருந்தா, 'வேணாங்க ... மூத்தவ வந்திடட்டும்'னு எங்க வீட்டுக்காரரைத் தடுத்திருப்பேன். ஹூம். காலைல உசிரு போன கையோட உனக்கு எக்ஸ்ப்ரஸ் தந்தி அடிச்சோம். சாயங்காலம் ஆறு வரைக்கும் உன்னண்ட இருந்து ஒரு தகவலும் வராததக் கொண்டு, சரி, இவ புருஷனுக்குக் கோபம் இன்னும் தணியலை. காத்துக்கிட்டிருக்குறதுல புண்ணியம் இல்லே-ன்ற முடிவுக்கு வந்தோம். யாரைக் கொள்ளி வைக்கச் சொல்றதுனு நா மலைச்சிகிட்டு நின்னப்போ, 'இவ கையால அஞ்சு வருஷமா சோறு தின்னிருக்கேன். என் தங்கச்சிக்கு இப்படி ஒரு நிலை வந்தா சும்மா இருப்பேனா! நா கொள்ளி வைக்கறே'ன்னு எங்க வீட்டுக்காரர் கிளம்பிட்டார். அனாதை மாதிரி போகாம...உங்கம்மா ஜாம் ஜாம்னு தான் போய்ச் சேர்ந்தா... அதை நினைச்சி மனசைத் தேத்திக்கம்மா..."

கல்யாணி பேசப்பேச மீனாட்சியின் விசும்பல் அதிகமானது. பக்கத்தில் உட்கார்ந்திருந்தவளின் கைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டவளுக்கு 'அம்மா... அம்மா' என்று அரற்றுவதைத்

தவிர வேறு எதுவும் சொல்லத் தெரியாது போயிற்று.

இரண்டு நிமிஷம் அப்படியே அமர்ந்து அவள் வேதனையில் பங்கெடுத்த கல்யாணி பரிவுடன் பேசினாள்.

"கண்ணைத் துடைச்சிகிட்டு எழுந்திரு மீனாட்சி. கொழந்தை சுருண்டு போய்ப் படுத்திட்டா பாரு... முகத்தைக் கழுவிக்கிட்டு வா, காபி கலந்து தரேன். நீயும் குடிச்சி உன் மகளுக்கும் கொடு. பார்வதி வேற மிரண்டு போய்ப் படுத்திருக்குறா. அவளுக்கு ஆறுதல் சொல்லித் தேத்தறதை விட்டுட்டு நீயே இப்படி இடிஞ்சி போயிட்டா எப்படி? ம்ம்...எழுந்திரு..."

சமையல் கட்டில் உட்கார்ந்து கல்யாணியின் வற்புறுத்தலுக்காக ஒரு வாய் காபி குடித்தபோது, நேற்றுக் காலைவரை அம்மா இந்த அறையில் ரத்தமும் சதையுமாக உயிருடன் வளைய வந்திருக்கிறாள் என்ற நினைப்பு எழுந்து, அடங்கி இருந்த கண்ணீரை உசுப்பி விட்டது.

அப்பா இறந்த பின் அம்மா ஒண்டியாய்ப் பட்ட அவஸ்தைகள், தன்னைத் திருமணம் செய்து கொடுக்கப் பட்ட கஷ்டங்கள், அதன் பின் மாப்பிள்ளையால் உணர்ந்த வேதனைகள் என்று ஒவ்வொன்றாய் நினைவில் எட்டிப் பார்க்க, அழுகை பெரிசானது.



"ப்ச்... மீனாட்சி... என்னது இது மறுபடியும்! விழுங்கிக்க...எச்சில் கூட்டி துக்கத்தை விழுங்கிக்க... பெரியவளா நடந்துக்க..."

மீனாட்சி புடைவைத் தலைப்பை வாயில் திணித்துக் கொண்டாள்.

அழுகையினூடே பேசினாள்.

"என்னால தாங்க முடியலம்மா. எதுக்கும், யாருக்கும் உபயோகமில்லாம வாழற நா போயிட்டு எங்கம்மா இருந்திருக்கக்கூடாதா?"...

"அது சரி....சமர்த்தாதான் பேசற...பெத்தவ இருந்து மக போறது நியாயமா, மீனாட்சி?"

"இது மட்டும் நியாயமாம்மா? ஆதி நாள் தொட்டே எங்கம்மா பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சம் இல்லே... இப்பத்தான் உங்க நிழலை அண்டினப்புறம் ஓரளவுக்கு நிம்மதியா இருந்தாங்க... மூத்தவள்னு பேரே ஒழிய என்னால அம்மாவுக்குக் கஷ்டந்தான். வேதனைதான்... ஒரு நாளைக்கு 'உட்காரும்மா'னு சொல்லி ஒரு வாய்ச் சோறு போட்டு, உடுத்திக்க ஒரு புடவை எடுத்துக் கொடுத்தது கிடையாது. ஆனா...ஆனா... அவங்க கிட்டேயிருந்து வேண அளவுக்கு சுரண்டிக்கிட்டிருந்தேன். அதான் செத்தப்புறம்கூட நா அவங்க முகத்தைப் பார்க்க யோக்யதை இல்லேன்னு கடவுள் என்னைத் தண்டிச்சிட்டார்..."

"இந்தா, எதுக்கு வீணா இல்லாததையெல்லாம் கற்பனை பண்ணிக்கிட்டு அழுவறே? கண்ணைத் தொடைச்சுக்க..."

"இல்லேம்மா... நா நிஜத்தைத்தான் சொல்றேன். நீங்களும் அய்யாவும்தான் அவங்களுக்குச் சொந்தம், பந்தம் எல்லாம். நா எதுக்கும் லாயக்குப் படாத தரித்திரம்..."

"ப்ச்... திரும்பத் திரும்ப சொன்னதையே சொல்லி விட்டு இருந்தா எப்படி? அந்தப் பேச்சை விடு— காபி ஆறுது. குடிம்மா..."

முழங்கால்களைக் குத்திட்டு அதில் முகத்தைப் பதித்து மீனாட்சி கொஞ்ச நேரம் விம்மினாள்.

பின், லேசாகச் சமாதானமாகி ஆறிவிட்ட காபியைக் குடித்தாள்.

எழுந்து லோட்டாவைக் கழுவி வைத்தவள், கல்யாணியின் கரங்களைப் பற்றி நெஞ்சில் வைத்துக் கொண்டாள்.

"சத்தியமா சொல்றேன்ம்மா... நீங்களும் அய்யாவும் தெய்வம்... மனுஷங்களெல்லாம் மிருகங்களாக மாறிட்ட இந்த நாள்ல இப்படிக் கூட... இப்படிக் கூட..."

கோவையாக வார்த்தைகள் வராமல் மீனாட்சி தவிக்க, கல்யாணி இதமாகப் புன்னகைத்தாள்.

"தெய்வமும் இல்லை... ஒண்ணும் இல்லை... உங்கம்மா எங்கள்ல ஒருத்தியா இருந்ததுக்கு நாங்க இது கூட செய்யாட்டி எப்படி? ம்?"—

"கட்டின பெண்டாட்டி செத்தாலும் ஏன்னு கேட்க மனசு இல்லாத மனுஷங்க இருக்குற உலகம்மா இது..."



அவள் யாரைக் குறிப்பிடுகிறாள் என்பது புரிந்தது போலக் கல்யாணி மௌனித்தாள். பின், மெதுவாகக் கேட்டாள்.

"உன் புருஷன் எப்படி இருக்கான், மீனாட்சி?"

"அவருக்கென்ன, நல்லாதான் இருக்காரு."

"அப்புறம், அவன் ஏன் உன்கூட வரலை?"—

இது என்ன கேள்வி என்கிற மாதிரி மீனாட்சி கல்யாணியைப் பார்த்துவிட்டு, பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

"அவுரு குணம்தான் உங்களுக்குத் தெரியுமேம்மா!"

"தெரியும்... நெதைக்கும் கமலம் சொல்லிச் சொல்லிப் புலம்புவாளே! ஹூம்! மாறியிருப்பானோனு ஒரு நப்பாசை..."

"சூரியன் மேற்கே உதிக்குற அன்னிக்குத்தான் என் புருஷனும் மாறுவார்ம்மா..."

கொஞ்சம் தயங்கிவிட்டு மீனாட்சி தொடர்ந்தாள்.

"உங்ககிட்ட சொல்லறத்துல என்னம்மா வெட்கம். இங்க என்ன கண்டிஷனோட என்னை அனுப்பி இருக்காரு தெரியுமா?"—

"என்ன?"

"எங்கம்மாவோட நகை, அவங்க சேர்த்து வைச்சிருக்குற பணம் இதுல பாதி வாங்கிக்..."

முடிக்க முடியாமல் குரல் செம்மிப் போக, மீனாட்சி தலையைக் குனிந்து கொண்டாள்.

விழிகளில் திரண்டு விட்ட நீர், கன்னத்தில் வழிந்து மார்புச் சேலையில் சொட்டியது.

"நகைனு உங்கம்மா என்ன வைச்சிருந்தா? ஒரு செயின், ஒரு ஜதை வளையல்; இதானே?...மத்தபடி அவ பணம்னு என்கிட்ட சேர்த்து..."

"அய்யோ... என்னம்மா நீங்க! என் புருஷன் மாறிட்டாரானு கேட்டீங்களேனு இந்த விஷயத்தைச் சொன்னேனே தவிரவும், உங்க கிட்ட விவரம் கேட்கவோ இல்லை என் தங்கைக்குச் சேர வேண்டியதுல பங்கு கேட்கவோ சத்தியமா இல்லேம்மா. எங்கம்மா பணம், நகைனு எதுவும் வைக்கலை, கடன்தான் சேர்த்து வைச்சிட்டுப் போயிருக்காங்க-னுதான் அவரண்ட சொல்லப் போறேன். என்னை நம்புங்க..."

வாயைப் பொத்திக் கொண்டு மீனாட்சி அழுத நாழிகையில் கல்யாணி என்னவோ யோசனை பண்ணினாள்.

"பெத்தவ செத்ததுக்கு அனுப்பறத்துக்கே பங்கு கேக்கறவன், நாளைக்கு உன் தங்கச்சிய அழைச்சிட்டுப் போனா என்ன சொல்லுவான் மீனாட்சி?"—

—தங்கச்சி, கிங்கச்சினு எவளையாவது இழுத்துக்கிட்டு வந்தேன்னா இந்த வீட்டு வாசப்படி மிதிக்க விட மாட்டேன். ஒட்டு மொத்தமாக எல்லாரையும் அடிச்சி விரட்டிட்டு, நானும் எங்க யாச்சும் ஒழிஞ்சி போயிடுவேன்—ஆமாம்...



வீட்டை விட்டுக் கிளம்பு முன் உறுமலாய்ப் புருஷன் பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வர, மீனாட்சி மார்பில் ஓங்கி அறைந்து கொண்டாள்.

பதில் கூறாமல் அவள் தொடர்ந்து விம்ம, மீண்டும் அதே கேள்வியைக் கல்யாணி கேட்டாள்.

"சொ...சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களேம்மா...?"

"சொல்லு..."

தயங்கித் தயங்கி, கூசிப் போனவளாய்ச் சொன்னாள்.

முதல் நாள், இன்று காலை, தனக்கும் புருஷனுக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகளை மீனாட்சி கூறினபோது, புருவங்களைச் சுருக்கிக் கொண்டு, குறுக்கே ஒரு வார்த்தை சொல்லாமல் கேட்ட கல்யாணி, அன்றிரவு தனிமையில் கணவரிடம் இது பற்றி விளக்கமாகப் பேசினாள்.

அப்புறம், தாங்கள் எடுத்திருந்த முடிவை மறுநாள் காலையில் அக்கா, தங்கையை ஒன்றாக எதிரில் உட்கார வைத்துத் தெரிவித்தாள்.

"தங்கையை உன்கூட அழைச்சிட்டு வந்தா, உன்னைப் படி ஏற விடமாட்டேன்னு உன் புருஷன் சொல்லிட்டான்றதை தெரிவிச்சிட்டு நீ பரிதவிச்சி போனதும் எனக்கும் ரொம்ப கஷ்டமாயிடிச்சி...அது

என்னமோ தெரியலை. இந்த மாதிரி ஒரு நிலைமை வரப்போவுதுனு புரிஞ்ச மாதிரி, இரண்டு நாள் முன்னால, 'எனக்கு ஒண்ணு நேர்ந்திட்டா பார்வதி கதி என்னவாகும்?'னு கமலம் என்கிட்ட வருத்தப் பட்டுகிட்டா. 'ஏன் இப்படிப் பேசறே... நாங்கள்ளாம் உன் கண்ணுக்கு மனுஷங்களாத் தெரியலையா? பார்வதிய அனாதரவா விட்டுடு வமா?'னு ஆறுதல் சொன்னேன். இதை நினைப்புல வைச்சிகிட்டு நேத்து ராத்திரி என் வீட்டுக்காரர் கிட்ட பேசினேன். நீ எது தீர்மானம் செஞ்சாலும் அதுல எனக்குச் சம்மதம்தான்னு சொல்லிட்டாரு. பார்வதி இப்ப பத்தாவது படிக்குறா... இன்னும் நாலு மாசத்துல பரிட்சை. அதை முடிச்ச கையோட, ஷார்ட் ஹாண்ட், டைப்பிங் கத்துக் கொடுத்து இருநூறு, முன்னூறு சம்பாதிக்கிற திறமை அவளுக்கு வந்திட்டா, அப்புறம் ஒருத்தன் கையிலே பிடிச்சுக் கொடுக்க கஷ்டப்பட வேணாம். அதனால அதுவரைக்கும் அவளை நாங்களே வீட்டோட வைச்சிக்கலாம்னு தீர்மானம் பண்ணி இருக்கோம்... என்ன சொல்றே மீனாட்சி?"—

என்ன சொல்லுவாள்?

வயசுக்கு வந்துவிட்ட தங்கையை அணைத்து, ஆதரவாய்த் தன்னோடு வைத்துக் காப்பாற்ற முடியாமல் புருஷன் தடுக்கிறானே, இனி அவள் கதி என்ன?— சொந்தம் என்று ஒட்டிக் கொள்ள வேறு நாதியில்லையே! தாலி கட்டினவன் அடித்துத் துன்புறுத்தினாலும் பரவாயில்லை என்று தங்கையை உடன் அழைத்துப் போவதைத் தவிர வேற வழி



இல்லையோ என்றெல்லாம் எண்ணிப் பதறிக் கொண்டிருப்பவள்— என்ன சொல்லுவாள்?

என்னால் செய்ய முடிந்தது இது ஒன்றுதான் என்பது போல, கல்யாணியின் கால்களில் விழுந்து வணங்கினாள்.

"நீங்க சத்தியமா தெய்வம்தாம்மா... என் தங்கை அதிருஷ்டக்காரி... உங்க கண்காணிப்புல அவ நிச்சயம் நல்ல விதமா தலை எடுத்திடுவா.... இனி...எனக்கு எந்தக் கவலையும் இல்லே!" என்று திரும்பத் திரும்பப் புலம்பினாள்.

எதுவும் பேசாமல் ஜடமாய் நின்றிருந்த பார்வதியின் பக்கம் கல்யாணி திரும்பினாள்.

"உனக்கும் இந்த ஏற்பாட்டுலே சந்தோஷம் தானே பார்வதி—?"

தலைவலி, கால்வலி என்று சொல்லிக்கொண்டு படுக்காமல் கிடக்காமல் பொக்கென்று அம்மா போய் விட்ட சேதியில் பார்வதி அரண்டு போயிருந்தாள் என்றால், நாலு வருஷமாக சந்திக்காத அக்காக்காரி சோளக் கொல்லைப் பொம்மை மாதிரி வந்து இறங்கினதும் இன்னும் அடிபட்டுப் போகவே செய்தாள்.

இவளா?

என் அக்காவா?

பிச்சைக்காரி மாதிரி இருக்கும் இவளுடனா நான் போய்த் தங்க வேண்டும்?

இவளையும், இவள் மகளையும் பார்த்தால் சோறு கீறு சாப்பிடும் ஜன்மங்களாகத் தெரிய வில்லையே!

அத்தான் வேறு மகா பொல்லாதவர் என்று அம்மா வாய்க்கு வாய் சொல்லுவாளே!

சோறு தண்ணீர் கொடுக்காமல் செமத்தியாய் வேலை வாங்குவார்களோ?

என் படிப்பு?

அது என்னாவது?

எதுவும் புரியாமல் நாள் முழுவதும் குழம்பி, ஒருவரிடமும் ஒரு வார்த்தையும் பேசப் பிடிக்காமல் ஒதுங்கி இருந்தவளுக்கு, சற்றும் எதிர்பார்க்காத தினுசில், 'நீ எங்களுடன் தொடர்ந்து இருக்கலாம்' என்று கல்யாணி கூறினது, காயம் பட்ட மனசில் மருந்தைத் தடவாமல் வேறு என்ன செய்யும்?

இது நாள் இல்லாத பாசமும், மரியாதையும் இதயத்தில் வெடிக்க, "நீங்க எது சொன்னாலும் எனக்குச் சரிதாம்மா... உங்க வார்த்தைய நா என்னிக்கு மீறியிருக்கேன்?" என்றாள் உணர்ச்சி வசப்பட்டு.

## 4

"ஏய் சனியனே..."

"......"

"மூதேவி...காது கேக்கலியா?"—



சமையல் அறையில் கடுகு தாளித்துக் கொண்டிருந்த மீனாட்சி, ஈரக்கையைத் தலைப்பில் துடைத்த வண்ணம் கூடத்தில் எட்டிப் பார்த்தாள்.

"கூப்பிட்டிங்களா?"

"கூப்பிட்டிங்களா?"—அவள் மாதிரியே கீச்சுக் குரலில் பேசின நடராஜன் பட்டென்று கத்தினான்.

"கழுதை மாதிரி அரை மணியா கத்தறேன்; சாவகாசமா வந்து எட்டிப் பார்க்கறியே, உனக்கு என்ன திமிர்?"—

"காது கேக்கலிங்க..."

"உருப்படியா அது ஒண்ணுதான் இருந்துச்சு. அதுவும் போச்சா? சனியன்...தரித்திரம்..."

"......"

"உன் முகரக் கட்டைய விட்டொழிச்சிட்டு எங்க யாவது போயிடுவோம்னு பார்த்தா அதுக்குக்கூட வேளை வர மாட்டேங்குதே! எல்லாம் என் தலை எழுத்து. உன்னைக் கட்டிகிட்டு மாரடிக்கனும்னு இருக்குது."

"எதுக்குக் கூப்பிட்டீங்க அத்தனை அவசரமா? இதச் சொல்லத்தானா?"—

நிதானமாக அவள் வினவவும் நடராஜனின் எரிச்சல் அதிகமானது.

"இதச் சொல்ல கூப்பிடலை; உன்னைக் கட்டி அணைச்சிக்கனும்னு ரொம்ப ஆசையா

இருந்துச்சு... அதான்.... போடி மூளை கெட்ட முண்டம்..."

"உள்ளே வேலை இருக்கு... முக்கியமா எதுவும் பேச வேணாம்னா நா போகவா?"—

"அப்படி என்ன தலை போற வேலை?"—

"டிபன் செஞ்சிட்டு இருக்கேன்."—

"என்ன டிபன்?"—

"ரவா உப்புமா"—

"இந்த உப்புமாவ விட்டா உனக்கு வேற எதுவுமே செய்யத் தெரியாதாடி?"

"......"

"எப்ப கேளு உப்புமா... தரித்திரம் ...ஞாயித்துக் கிழமை அன்னிக்குக்கூட நல்ல டிபனா செய்ய முடியாதா உனக்கு? ஒரு பூரி மசாலா, ஒரு வடை சாம்பார். எத்தனை இருக்கு...மூர்த்தி பொண்டாட்டி சுகுணாவைப் பாரு; நெதைக்கும் ஒரு பலகாரம்னு அமர்க்களப்படுத்தறா... நீயும் இருக்கியே, சோம் பேறிக் கழுதை."

"எண்ணெய் சுத்தமா இல்லே... வாங்கிட்டு வந்து கொடுங்க. நானும் வடை, போண்டான்னு ஜமாய்ச்சிடறேன்..."

"என்னது! எண்ணெய் தீர்ந்திடிச்சா! அடிப் பாவி! தேதி இருவதுதான் ஆவுது. அதுக்குள்ளவா? அத்தனை எண்ணெயும் என்னடீ செஞ்சே? வாரிக் குடிப்பியா, இல்லே கீழே எடுத்து ஊத்திடுவியா? அந்த மூர்த்தி என்னை விடக் குறைச்சலாதான் சம்பளம் வாங்கறான். ஆனாலும், அவங்க நிறைக்க குடித்தனம் பண்ணலை? துப்பு கெட்ட மூதேவி... இதுக்குத்தான் சொல்றது, பெண்டாட்டி சமர்த்தா இருக்கணும்னு...எங்கே? உனக்கு..."

"ரொம்பத்தான் வெரட்டாதீங்க... அந்த மூர்த்தி உங்களை மாதிரி சீட்டாடுறாரா? புகை பிடிக்கிறாரா? இல்லே சினேகிதங்ககூட சேர்ந்துகிட்டு பணத்தைக் கண்டபடி..."

அவள் அந்த வாக்கியத்தை முடிக்கும் முன் பச்சென்று கன்னத்தில் ஒரு அறை விழுந்தது.

"மேலே பேசினயோ கொன்னுடுவேன். நாய்... கூறு கெட்ட நாய் ... எதிர்த்தா பேசறே?... உன்னை..."

கையை ஓங்கிக் கொண்டு நடராஜன் முன்னால் வர, மீனாட்சி அவசரமாய்ப் பின்னால் நகர்ந்தாள்.

"இப்ப மட்டும் கொல்லாம, மடிலே வைச்சி கிட்டு சீராட்டறதா நினைப்போ?"—

"ஆமாண்டி ... உன் முகரக்கட்டை இருக்குற லட்சணத்துக்கு மடிலே வேற தூக்கி வைச்சிக்க மாட்டாங்களோ? சனியனே! ஒழி. என் கண் முன்னால நின்னு ஆத்திரத்தைக் கிளப்பாதே... நீயும் உன் நசுங்கின தகர டப்பா மூஞ்சியும்... த்தூ..."

காறித் துப்பினவன், ஸ்டாண்டிலிருந்து சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான்.

செருப்பை அணிந்து, எதிரில் நிற்பவளை லட்சியம் பண்ணாமல் விறுவிறென்று தெருவில் இறங்கிக் கடந்தான்.

அன்றைய பொழுது விடிந்ததிலிருந்தே நடராஜனுக்கு நேரம சரியில்லைதான்.

கண் விழிக்கும்போது ஏதோ துர் சொப்பனம்; பல் தேய்க்கையில் கால் வழுக்கிச் சறுக்கி விழுந்ததில் முழங்கால் அடி; ஐம்பது ரூபாய்ப் பணத்தோடு ரம்மி விளையாடச் சென்று பகல் பன்னிரண்டுக்குள் அத்தனையையும் இழந்துவிட்டு வெறுங்கையுடன் வீடு திரும்பிய ஏமாற்றம்...

சரி, இன்றைய போது நல்லதாக இல்லை, பேசாமல் சாப்பிட்டுவிட்டு வீட்டிலேயே கிடப்போம் என்று மதிய உணவை உட்கொண்ட பிறகு ஒரு குட்டித் தூக்கம் போட்டவனுக்கு, மூன்று மணிக்கு எழுந்து உட்கார்ந்ததும் உள்ளங்கை நமைச்சல் எடுத்தது. ஞாயிற்றுக் கிழமை விடுமுறைநாள். ஜமா சேர்ந்திருக்கும். குஷாலாய் அங்கு ஆடிக் கொண்டிருக்காமல் வீட்டில் தண்டமாய்ப் பொழுதைப் போக்குகிறோமே என்று ஏக்கம் எழுந்ததும், அதைத் தணிக்க டிபனில் புத்தியை விரட்டினான்.

பிடிக்காத சிற்றுண்டி என்பதோடு, வழக்கமாய் அடங்கிப் போகும் மீனாட்சியும் இன்று பதிலுக்கு



எகிற, அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டு தொடர்ந்து அங்கு நிற்கப் பிடிக்காமல், மீண்டும் நண்பர்களைத் தேடிப் போனான்.

மறுநாள் எப்படியாவது பணம் தந்து விடுகிறேன்- என்று நண்பர்களிடம் கூறி, கடன் சொல்லி ஆடத் தொடங்கியதுக்கு நஷ்டத்துக்கு மேல் நஷ்டம்...

விட்டதைப் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கையில் மேலே மேலே ஆட, கடன் நூறைத் தாண்டினதும் ஜெயித்த நண்பன் முறுக்கிக் கொண்டான்.

“இன்னிக்கு நீ ஆடினது போதும், நடராஜ். கணிசமா கடன் சேர்ந்து போச்சு. நாளை சாயங்காலத்துக்குள்ளார பணத்தைக் கொடுத்திட்டு, சொன்ன வார்த்தைய காப்பாத்திக்க... துட்டு விஷயத்துலே நான் ரொம்ப கரெக்ட்... அது உனக்கே தெரியும். புத்தியா நடந்துக்க... என்னப்பா, மத்தவங்க ரெடியா? சீட்டைக் கலைச்சி போடலாமா?”

பதில் பேசாமல் நடராஜ் எழுந்து வீட்டுக்கு வந்தான்.

பசி.

தோற்றுவிட்ட கோபம்.

மாசக் கடைசியில் நூறு ரூபாய் பணத்துக்கு எங்கே போவது என்ற கவலை.

எதுவும் புரியாமல் உள்ளே நுழைந்து வாயைத் திறக்காமல் மீனாட்சி போட்ட சோத்தைத் தின்றவன், சில நிமிஷங்களுக்குக் கண் மூடி அமர்ந்து என்னவோ யோசித்தான். பிறகு, தாடையை இறுக்கிக் கொண்டு, அடிக் குரலில், "ஏய்... இங்க வா," என்று மனைவியை அதட்டி அழைத்தான்.

"என்ன?"—

"உங்கம்மா வைச்சிருந்த நகைங்க என்னாச்சுனு சொன்னே?"

திடுதிப்பென்று, அம்மா செத்து பத்து மாசங்களுக்குப் பிறகு, இப்படியொரு கேள்வியைக் கணவன் எழுப்ப, உடனே பதில் சொல்லத் தெரியாமல், மீனாட்சி கண்களை விரித்துக் கொண்டு நின்றாள்.

"வாயில என்ன? கொழுக்கட்டையா? பதில் சொல்லறது..."

"அ... அது வந்து..."

"வந்து?"—

"அவங்க கிட்ட பிரமாதமா நகைனு ஒண்ணும் இருந்ததாத் தெரியலை..."

"இருந்த வரைக்கும் சொல்லு."

"அதான், அன்னிக்கே, அப்பவே சொல்லிட்டேனேங்க..."



"இன்னொருதரம் சொன்னா தேஞ்சிடுவியோ?"

மீனாட்சி எச்சிலைக் கூட்டி விழுங்கினாள். அன்றைக்கு என்ன காரணம் சொன்னோம் என்று நினைவைப் புரட்டினாள்.

"அம்மா ரொம்ப உடம்புக்கு முடியாம படுத்திருந்தப்போ, செலவுக்கு வேண்டி அடகுல வைச்சது, வட்டி கட்ட முடியாம மூழ்கிப் போச்சுனு சொன்னாங்க."

"எது?"—

"செயின்."

"சரி, அப்புறம்?"—

மீனாட்சி அவசரமாய் ஞாபக சக்தியைத் தோண்டினாள்.

ம்ஹூம், சுத்தமாய் நினைப்பில்லை.

எதையாவது சொல்லி சமாளிக்க வேண்டியது தானோ?—

"வளையல்களை தங்கச்சி போட்டுகிட்டுப் போய் தொலைச்சிட்டானு சொன்னாங்க..."

நடராஜன் எழுந்து கிட்டத்தில் வந்தான்.

தலை முடியைப் பற்றி, முகவாயில் ஒரு குத்து விட்டான்.

"பொய்யாடி சொல்றே? என்னண்ட பொய் சொல்லணும்னா உனக்கு என்ன துணிச்சல், ம்?"

பசக்... இன்னொரு அடி...

"அய்யோ... விடுங்க... விடுங்க." குரல் எடுத்து மீனாட்சி கத்த, கலாவும், மாலாவும், 'அம்மாவ விடுங்க'... என்று கெஞ்சியபடி குறுக்கே வந்தன; கீதா எதுவும் புரியாமல் அழுது கொண்டு அம்மாவின் காலைக் கட்டிக் கொண்டது

"பக்கத்துல வந்திங்கன்னா உங்க எல்லார் மூஞ்சி மோரையும் பெயர்ந்திடும். தள்ளுங்க. சொல்லுடி ... பொய்தானே? அன்னிக்கு வளையல்கள் அடகுலே மூழ்கிப் போச்சு, வேற நகையே இல்லேனு சொல்லிட்டு, இன்னிக்குப் புதுசாவா கதை விடுறே? மூதேவி...உன்னை..."

பலமாய் இன்னும் இரண்டு அறைகள் முதுகில் விழ, மீனாட்சி குந்தி உட்கார்ந்து அழ ஆரம்பித்தாள்.

"திருட்டு முழி முழிச்சிகிட்டு அன்னிக்கு நீ பேசினப்பவே எனக்குச் சந்தேகம்தான்... தங்கச்சிக்கு சொத்தா சேர்க்கறே? தேவடியா நாயே ... செயின் மூழ்கிப் போச்சு; வளையல்களைத் தங்கச்சித் தொலைச்சிட்டானு இப்ப சொன்னதும் பொய்தானே? நிமிர்ந்து பார்த்து, உண்மைய ஒத்துக்க ... வாயைத் திறந்து சொல்லும்..."

மொத் மொத்தென்று முதுகில் அவன் குத்த, வலி தாங்காமல், "அம்மா... அய்யோ... அம்மா... ஆ... இப்படிக் கொல்றாரே, இத கேட்க யாரும் இல்லியா?" என்று இன்னும் பெரிசாய் மீனாட்சி அழுதாள்.



ஆத்திரத்தோடு பிடரியை உலுக்கி, குட்டி, உதைத்து தான் கூறினது பொய்தான் என்று அவளை ஒத்துக் கொள்ள வைத்த பின் கைகளைத் தட்டிக் கொண்டு நடராஜன் நிமிர்ந்தான்.

"உன் திமிரை என்னண்டையா காட்டுறே? நிமித்திடுவேன் நிமித்தி ... ராஸ்கல் ... உன்னை எப்படிக் கவனிக்குறதுன்னு எனக்குத் தெரியும்... முதல்ல அந்த நகைங்க கைக்கு வரட்டும். அப்புறமா பேசிக்கறேன்."

சொன்னதோடு நிற்காமல், மறுநாள் அலுவலகத்துக்கு விடுப்பு எடுத்துக் கொண்டு, ஏழு மணி பஸ்ஸில் ஏறி, சென்னைக்குப் பயணமாகி, சதானந்தத்தின் வீட்டை அவன் அடைந்தபோது சரியாக மணி ஒன்பதே கால்.

## 5

கல்யாணியம்மா தூங்குகிறாளா என்று பார்த்து விட்டு ஓசைப்படாமல் தையல் மிஷினைத் திறந்து, கத்தரிக்கோலை எடுத்த பார்வதி, பழையபடி அதை மூடிவிட்டு, கொல்லைப் பக்கம் சென்று மாமரத்தின் மறைவில் உட்கார்ந்தாள்.

தலை முடியைப் பிரித்து விட்டுக் கொண்டு கையோடு கொணர்ந்திருந்த கைக்கண்ணாடியில் தன் பிம்பத்தை அழுந்தப் பார்த்தாள்.

அதிக எண்ணெய் இல்லாமல் புஸுபுஸு வென்று பறந்த முடி, பார்க்க அழகாகத்தான் இருந்தது.

—டி.வி. ஷாம்பூ விளம்பரத்துல வர்ற பெண்கள் முடிபோல உன்னதும் ஸில்கா இருக்கு, பாரு... முன்னெத்தில இப்படி, அப்படி இரண்டு கத்தைகளை கத்திரிச்சி விட்டா, இன்னும் ஜோரா இருக்கும்... அப்படியே நீளத்தையும் வெட்டிடு... நுனி கூழை பாஞ்சிகிட்டு, நல்லாவேயில்லே...

டைப்பிங் இன்ஸ்டிட்யூட்டில் கூடப் படிக்கும் தாரிணி பேசிய பேச்சுக்கள் ஆளை உசுப்பி விட, நாலு நாட்களாய் இப்படியொரு சந்தர்ப்பத்துக்கு காத்திருந்துவிட்டு, பார்வதி துணிந்திருக்கிறாள்.

—கன்னா பின்னானு வெட்டாதே... முதல்ல எண்ணெய் பிசுக்கில்லாம தலைக்கு முழுகிடு... நல்லா உலர்ந்ததும் சீப்பால சீரா வாரிக்க...அப்புறம் இப்படி வெட்டிடு.

தாரிணி சொல்லிக் கொடுத்ததை ஞாபகப் படுத்திக் கொண்டு முதலில் மொத்த முடியையும் சேர்த்துப் பிடித்து, நுனியில் மூன்றங்குல நீளத்தை வெட்டினாள்.

தலையை ஒரு உலுக்கு உலுக்கி, பார்வையைத் தழைத்துப் பார்க்கையில், குதிரை வால் போல அடர்த்தியாய், ஒரே கோடாய் முடி தொங்குவது தெரிந்தது.



என்ன இருந்தாலும் தாரிணி கெட்டிக்காரிதான் அவளுக்குத் தெரியாதது எதுவுமே இல்லை.

மனசில் ஸ்னேகிதியைப் பாராட்டியபடி கண்ணாடிக் கருகில் பார்வதி இன்னும் குனிந்தாள்.

கவனமாய் நெற்றிக்குப் பக்கத்தில் சுண்டுவிரல் பருமனுக்கு முடியைத் தேர்ந்தெடுத்து நிதானமாய் வெட்ட, வெட்டுப்பட்ட கற்றை, காற்றில் சீறி, புருவத்துக்கு மேல் கவர்ச்சியாய்க் குதித்தது.

அப்படியே அமர்ந்து சந்தோஷத்தோடு தன் புது அலங்காரத்தை ரசித்தவள், கல்யாணி யம்மாவின் கண்களில் இந்த வெட்டல்கள் விழாமல் இருக்க, இரண்டு ஸ்லைட்களால் அவைகளைப் பறக்க விடாமல் அடக்கினாள்.

பின்னலை நுனி வரையில் தளரப் பின்னி ரிப்பனை பெரிசாய் முடி போட்டு, நுனி அதிகம் வெளியில் தெரியாதபடி செய்த பின், சப்தம் போடாமல் கத்தரிக்கோல், கண்ணாடிகளை அதனதன் இடங்களில் வைத்து விட்டு சாது மாதிரி, வாசப் பக்கம் சென்று உட்கார்ந்து கொண்டாள்.

மூன்று மணி வெயில் ஆளை அசத்தியது.

புட்டீ, புட்டீ என்று குரல் கொடுத்துக் கொண்டே ஒரு ஆள் தலையில் கூடையுடன் சென்றான். தொடர்ந்து குச்சி ஐஸ் விற்பவன்; எங்கோ போய் விட்டு வேர்க்க விறுவிறுக்கத் திரும்பும் பெண்மணி.

கொஞ்ச நேரம் தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து விட்டு, அங்கேயே திண்ணையில் காலை நீட்டிப் படுத்துக் கொண்டாள்.

பின்னலை முன்னால் கொணர்ந்து பிரஷ் போல் அடர்த்தியாய் இருந்த நுனியைப் பார்த்து ரசித்தாள்.

விரல்களால் ஸ்லைட்களைத் தடவி, சாமர்த்தியமாய்க் கல்யாணியம்மாவை ஏமாற்றிவிடுவோம் என்ற பெருமையில் புன்னகைத்தாள்.

மறுநாள் காலை இன்ஸ்டிட்யூட்டுக்குப் போகையில் படு கவர்ச்சியாகக் காட்சியளிக்கப் போவதை நினைக்கும் போது சந்தோஷமாக இருந்தது.

ஆனால், வீட்டிலிருந்தே அந்த அலங்காரங்களில் போக முடியாது என்ற எண்ணம் வருத்தத்தையும் தந்தது.

ஸ்டைலாய் ட்ரெஸ் செய்வது கல்யாணியம்மாவுக்குப் பிடிக்காது.

மூக்குக் கண்ணாடியை இறக்கி விட்டுக் கொண்டு மேலும் கீழும் பார்ப்பாள். உதட்டைச் சுழிப்பாள்.

'ஐயே...என்ன அசிங்கம் இது...முதல்ல மாத்து...' என்பாள் தயங்காமல்.

தழைய பாவாடை உடுத்தக் கூடாது.

முக்கோணமாய், கொசுவம் இல்லாமல் தாவணி அணியக் கூடாது.



இரட்டைப் பின்னல் கூடாது.

அதிக பெளடர் பூச்சு, கண் மை இத்யாதிகள் கூடாது.

உரக்கச் சிரிக்கக் கூடாது.

ஸினிமா பார்க்கக் கூடாது. அந்தப் பாடல்களைத் தவறியும் முணுமுணுக்கக் கூடாது.

இப்படிப் ஊர்ப்பட்ட கூடாதுகள் உண்டு.

ஆனால், அத்தனைக்கும் டிமிக்கி கொடுத்து ஏமாற்ற இந்தப் பத்து மாசங்களில் பார்வதி நன்றாகவே கற்று விட்டாள்.

அக்கா வீட்டுக்குப் போக அவசியம் இல்லாமல் செய்ததற்காக முதல் ஓரிரு மாதங்கள் கல்யாணியம்மாவுக்கு அடங்கிப் போனாள்.

அப்புறம் முதுகுக்குப் பின்னால் குட்டி குட்டியாக காரியங்கள் பண்ணக் கற்றுக் கொண்டாள்.

பள்ளிக்கூடத்தில் ஸ்பெஷல் ஃபீஸ் கேட்கிறார்கள் என்று ஓரிரு முறைகள் கூறிப் பத்தும், இருபதுமாய்ப் பணம் வாங்கிச் சென்று வகுப்புகளுக்கு மட்டம் போட்டுவிட்டு ஸினிமா பார்த்தாள்.

ஸ்னேகிதியுடன் ஷூட்டிங் பார்த்துவிட்டுத் தாமதமாய் வீடு திரும்பின போது முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு 'லைப்ரரில உட்கார்ந்து படிச்சிட்டு வரேம்மா' என்று கூசாமல் பொய் சொன்னாள்.

எப்படியோ பரிட்சையில் ஒழுங்காக பாஸ் பண்ணி விட்டதில் கல்யாணிக்கோ, இல்லை சதானந்தத்துக்கோ அவள் மேல் சந்தேகம் வரவில்லைதான்.

கமலம் இறந்த நான்காம் மாசம் பார்வதி பத்தாவது பரிட்சை எழுதினாள்.

சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுகிற தினுசில், முடிவுகள் வருவதற்காகக்கூட காத்திருக்காமல், உடனடியாய்க் கல்யாணி அவளை பஜாரில் இருந்த ஒரு தட்டெழுத்துப் பயிற்சி நிலையத்தில் சேர்த்து விட்டாள்.

இன்னும் இரண்டு மாசங்கள் போய் அந்த பரிட்சையிலும் தேறிவிட்டால், கவலை இல்லை.

தினமும் வீட்டு வேலைகளில் கல்யாணியம்மாவுக்கு உதவி பண்ணிவிட்டுப் பத்தரை மணி க்ளாஸுக்கு ஒன்பதரை மணிக்கே பார்வதி புறப்படுவாள். போனால், திரும்பும்போது மணி பன்னிரண்டைத் தொட்டு விடும்.

சில நாட்கள் தாரிணி, மற்றவர்களுடன் அரட்டை அடித்துவிட்டு, பார்க், கடைத்தெரு என்று சுற்றி விட்டு வீடு வந்து சேர ஒன்று கூட ஆகிவிடும்.

"ஏன் பார்வதி லேட்?" என்றால், "மிஷின் காலியா இருந்துச்சும்மா, கூட அரை மணி தங்கி ப்ராக்டிஸ் பண்ணேம்மா!" என்று பணிவோடு கூறுவாள்.



போர்த்தின முந்தானையும், குனிந்த தலையுமாக வீட்டிலிருந்து புறப்படுபவள், தெரு முனை தாண்டியதும், தன்னைத் தெரிந்தவர்கள் யாரும் பார்க்கவில்லை என்று ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு தலைப்பை ஒத்தையாக மார்பில் பிரித்து விட்டுக் கொள்வாள். தலை முடியைப்பற்றி இருக்கும் ஸ்லைட்களை எடுத்து விடுவாள். கண்களைச் சுழற்றி போவோர் வருவோர்களை நிமிர்ந்து பார்த்தபடியே நடப்பாள்.

A79722
894.8113

தாரிணியோடு சேர்ந்து விட்டால் கேட்கவே வேண்டாம்.

இன்ஸ்டிட்யூடின் பாத் ரூமுக்குள் சென்று தாரிணி தரும் லிப்ஸ்டிக்கை லேசாகப் பூசிப் பார்ப்பாள்.

அவ்வப்போது கிடைக்கும் காசைச் சேர்த்துத் தாரிணியிடம் கொடுத்து நெயில் பாலிஷ், சென்ட் என்று ஏதாவது வாங்கித் தரச் சொல்லுவாள்.

அப்படி முதல் தரம் வாங்கி நகங்களைப் பளபளக்க வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்ததும் கல்யாணி 'என்ன அது நகங்கள்ல? சாயமா?' என்று கேட்டதற்கு,'இன்ஸ்டிட்யூட் முதலாளியோட நண்பர் இந்த நெயில் பாலிஷ் விக்கறாரம்மா... படிக்கிற பெண்கள் எல்லாருக்கும் ஆளுக்கொரு பாட்டில் இனாமா கொடுத்தார்!' என்று சமாளித்ததுண்டு.

இத்தனை சாமர்த்தியம் இருந்தாலும், தன் அழகுக்கும், திறமைக்கும் ஏற்ற வாழ்க்கையைத்

CONNEMARA PUBLIC LIBRARY
7.3.97

தான் வாழவில்லை என்ற ஏக்கம் நாளுக்கு நாள் உள்ளுக்குள்வளர்ந்து வந்ததால் 'எப்போது டைப்பிங் ஹையர் பாஸ் பண்ணுவோம், எப்போது ஒரு வேலை கிடைத்து நம் கையிலும் நாலு காசு புழங்கும், இந்தக் கட்டுப்பாடுகளை உதறிவிட்டு எப்போது சுதந்திரமாக இருப்போம்' என்று அவள் தனக்குள் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது நிஜம்.

படுக்கப் பிடிக்காமல் பார்வதி எழுந்து உள்ளே வந்தாள்.

பெட்டியைத் திறந்து, தாரிணியிடமிருந்து வாங்கி வந்திருந்த பொம்மை பத்திரிகையைப் புரட்டினாள்.

ஒவ்வொரு நடிகையும் அணிந்திருந்த உடைகளை ஊன்றிக் கவனித்து, தன்னை அந்த மாதிரி கற்பனை பண்ணிப் பார்க்கையில் மனம் கிளுகிளுக்க, பார்த்த படங்களையே மீண்டும் மீண்டும் பார்த்து, நேரத்தை ஓட்டினவள் கல்யாணியம்மா எழுந்து சமையலறையில் காபி போடும் சப்தம் காதில் விழுந்ததும், அவசரமாய் புத்தகத்தைப் பெட்டியில் வைத்துவிட்டு, நெகிழ்ந் திருந்த ஸ்லைடுகளைச் சரி செய்து கொண்டே உள்ளே போனாள்.

## 6

வீட்டுக்குள் நுழையாமல், சற்று தள்ளி நின்று என்ன பேச வேண்டும் என்பதை இன்னொரு தரம் மனசுக்குள் நடராஜன் ஒத்திகை பார்த்துக் கொண்



போது, சதானந்தம் வீட்டிலிருந்து அந்த இளம் பெண் வெளியில் வர—

யோசிப்பதை விட்டு விட்டு நடராஜன் அவளை வெறித்தான்.

நல்ல தளதள உடம்பு.

சின்ன வயசு...

இன்னொரு தரம் என்னைப் பாரேன்— என்று தூண்டும் கவர்ச்சி.

யாரிவள்?

கையில் புஸ்தகம்.

குனிந்த பார்வை...

யாரிவள்?

சதானந்தம் தம்பதிக்குத்தான் குழந்தை குட்டிகள் யாரும் கிடையாதே!

கல்யாணியம்மாவின் தங்கை குழந்தைகள் அடிக்கடி வந்து தங்குவது உண்டு என்று முன்பு மீனாட்சி சொல்வாளே—அவர்களில் ஒருத்தியா?

நடராஜன் யோசனை பண்ணிய நிமிஷத்தில் வீட்டுக்குள்ளிருந்து "பார்வதி..." என்ற குரல் கேட்க, கேட் வரையில் வந்துவிட்ட பெண், சட்டென்று நின்றாள். திரும்பி உள்ளே போனாள்.

பத்தடி தள்ளி, தபால் பெட்டியின் மறைப்பில் நின்று கொண்டிருந்த நடராஜனுக்கு ஷாக் அடித்தது.

பார்வதி...

இவளா?

மீனாட்சியின் தங்கை பார்வதி, இவளா?

ரொம்ப வருஷங்களுக்கு முன் மூக்கில் சளி ஒழுக, கரியை அப்பிப் பூசின மாதிரி, வத்தல் உடம்போடு வளைய வந்த பார்வதி, இவளா?

உள்ளே சென்ற பார்வதி மறுபடி வெளியில் வந்தாள்.

குனிந்த தலை நிமிராமல் வலப்பக்கம் திரும்பி விடுவிடென்று நீளமாய் நடந்தாள்.

இழுத்துப் போர்த்திய தாவணிக்குள் சன்னமாய் குலுங்கிய மார்பகங்கள்; வடிவான பின்னழகு.

பார்வையை எடுக்க முடியாமல், அதிர்ச்சி யிலிருந்து மீள முடியாமல், நடராஜன், நின்ற இடத்திலேயே நின்று, நடப்பவளை வெறிக்க, தெரு முனைக்குச் சென்ற பார்வதி கொஞ்சம் தயங்கினாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். தோளைச் சுற்றி இருந்த தாவணியை விலக்கி, தொங்க விட்டாள். தலையை நிமிர்த்தி, நிதானமாய் நடக்கத் துவங்கினாள்

இந்தக் கோடியில் நின்று அத்தனையையும் ஒன்று விடாமல் பார்த்த நடராஜனுக்குத் தெளிவாக எதுவும் புரியாத மாதிரி இருந்தாலும், கூடவே என்னவோ புரிந்த மாதிரியும் இருந்தது.

கொழுந்தியாள் இந்த அளவுக்கு வளர்ந் திருப்பாள் என்றோ, மனசைச் சுண்டி இழுக்கிற



மாதிரி இருப்பாள் என்றோ எதிர்பார்க்காதவனுக்கு, இப்போது தான் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்துக் குழப்பம் ஏற்பட்டது.

திட்டமிட்டபடி உள்ளே போய்ச் சண்டை போட்டு, நகைகளைப் பெறத்தான் வேண்டுமா?

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு யோசித்தபோது வேண்டாம் என்றே தோன்றியது.

இந்தப் பார்வதி எப்படிப்பட்டவள் என்பதைத் தெரிந்து கொண்ட பின் அடாவடித்தனத்தை வைத்துக் கொண்டால் என்ன?

இன்னும் சில நிமிஷங்களுக்கு அப்படியே நின்று, கல்யாணியம்மாவிடம் பேசப் போவது என்ன என்று தீர்மானித்த பின், கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

வாசல் வராந்தாவில் ஏறி அடக்கமாய் 'அம்மா' என்று குரல் கொடுத்தான்.

"யாரு?"

கூடத்து ஊஞ்சலில் படுத்திருந்த கல்யாணி எழுந்து உட்கார்ந்து வினாவினாள்.

நடராஜன் முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டான்.

"நா...நான் தாம்மா...."

"நான் தான்னா?"

கல்யாணி கண்ணாடியை இறக்கி விட்டுக் கொண்டு, சாற்றி இருந்த கம்பிக் கதவு வழியாக அழுத்தமாய்ப் பார்த்தாள்.

"நடராஜ்...கமலம்மா மருமகன்..."

"ஓ...!"

கல்யாணியின் அதிர்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது.

"எங்க வந்தீங்க?"

நடராஜன் பதில் சொல்லாமல் கர்ச்சிப்பால் வாயைப் பொத்திக் கொண்டான்.

"எ...என்னனு சொல்வேங்க?...நா...நா..."

அந்தத் தழுதழுத்த குரலும், தொங்கியதலையும், கர்ச்சிப்பால் வாயை மூடுவதும் எதிர்பாராத செய்கை களாக இருக்க, என்னது இது என்ற கல்யாணி ஆச்சரியத்தாள்.

இவன் ஆயிரம் தவறு செய்திருந்தாலும், அதற்காக நாம் மரியாதை கொடுக்காமல் இருப்பது கூடாது என்ற நினைப்புடன் வாசற் கதவைத் திறந்து விட்டு, "உள்ள வாங்க" என்றாள்.

உள்ளே வந்த நடராஜன் சுவரில் சாய்ந்து நின்று கொண்டான். சன்னமாய்க் கலங்கினான். செம்மிய குரலைச் சரி பண்ணிக் கொண்டு கஷ்டப் பட்டுப் பேசினான்.

"உங்களுக்கு என் மேல கோபம் இருக்கும்... மாமியார் செத்ததுக்கு வராட்டாலும், அப்புறமாவது



வந்திருக்கணும்னு நினைப்பீங்க...அது நியாயம் தான். ஆனா, மீனாட்சி எல்லாம் விவரமா சொல்லி இருப்பா...என் நிலைமை அப்படி! மொத்தத்துல நா ரொம்ப பாவம் பண்ணி இருக்கேன்..."

தொடர்ந்து பேச முடியாதது போல அவன் தவிக்க, இப்போது நிஜமாகவே கல்யாணி ரொம்பவும்தான் அதிசயித்துப் போனாள்.

என்ன சொல்கிறான் இவன்?

பேசுவதைப் பார்த்தால், மாமியாரின் சாவுக்கு வர முடியாததைக் குறித்து ரொம்ப வருத்தம் என்பது போல் அல்லவா இருக்கிறது!

"என்னம்மா, எதுவுமே பேச மாட்டேங்கிறீங்க? என் மேல அவ்வளவு கோவமா?"

"பின்னே? கோவம் இல்லாம சந்தோஷமா இருக்கும்? பெத்த தாயோட காரியத்துக்கு அனுப்பறப்பகூட கண்டிஷன் போட்டவராச்சே."

"எ...என்னம்மா சொல்றீங்க?"

"கமலத்தோட நகை, பணத்துல பாதி எடுத் திட்டு வரணும்னு நீங்க மீனாட்சி கிட்ட சொல்லலை..."

"அய்யோ...அய்யோ!என்னம்மா சொல்றீங்க?"

"இந்த பசப்பெல்லாம் என்னண்ட வேணாம்... உங்களைப் பத்தி கமலம் நிறையவே சொல்லி இருக்குறா...கூடப் பிறந்த தங்கச்சிய அழைச்சிட்டு

வந்தா, படி ஏத்த மாட்டேன்னு சொன்னவர். இப்ப எங்க வந்தீங்க? அந்தச் சின்னப் பொண்ணு அனாதையா எப்படித் தவிச்சிகிட்டு இருக்கான்றதை பார்க்கவா? நல்ல வேளையா எங்க வீட்டுக்காரர் வீட்டுலே இல்லே... இருந்தா உங்களை என்ன செஞ்சிருப்பார்னு எனக்குத் தெரியாது..."

கல்யாணி பேசப் பேச, நடராஜன் ரொம்பவும் மிரண்டு போன மாதிரி முகத்தை வைத்துக் கொண்டான்.

ஓங்கித் தலையில் அறைந்து கொண்டு தரையில் உட்கார்ந்தான்.

"பாவி...பாவி...உனக்கு என் மேல அத்தனை எரிச்சலா? பசு மாதிரி இருந்துகிட்டு இந்த அளவுக்கு நாடகமாடியிருக்கியே....நீ நல்லா இருப்பியா?" என்று புலம்ப.

அடங்கி இருந்த வியப்பு மறுபடி கல்யாணியிடம் தொத்திக் கொண்டது.

ஏன் இப்படிக் கலங்குகிறான்?

யாரைப் பாவி, நாடகமாடிவிட்டாய் என்கிறான்?

"நீங்க என்ன சொல்றீங்க?"

அழுகையூடே நடராஜன் பேசினான்.

"கல்யாணமான புதுசிலே நா தலைகால் புரியாம ஆட்டம் போட்டது உண்டுதான். ஆனா,



தொடர்ந்து வந்த வருஷங்களிலே மாறிட்டேம்மா... என்னை நம்புங்க... சொன்னா நீங்க நம்ப மாட்டீங்கம்மா... மூணாவதைப் பெத்த நாளா மீனாட்சி ரொம்ப மாறிட்டா... அவங்கம்மாவ பிரசவத்துக்கு வரச் சொல்லிக் கடிதாசு போட்டும், வரலைன்ற கோபத்துல, 'அம்மாவுக்குத் தங்கச்சி தான் உசத்தி'னு சதா புலம்புவா... 'அவங்களுக்கு என்ன கஷ்டமோ! நேர போய்ப் பார்த்து விசாரிச்சிட்டு வரேன்'னு புறப்பட்டவனையும் தடுத்திட்டா...கமலம்மா செத்த தந்தி வந்தப்ப, நா ஆஸ்பத்திரிலே ஆக்ஸிடென்ட் ஆகி படுத்திருந்தேம்மா... கால், மார்பு, எலும்பு எல்லாம் உடைஞ்சி சாகக் கிடந்தேம்மா...அப்பவும், 'உடனே புறப்பட்டுப் போ— பெத்தவ மேல இத்தனை கோவம் ஆகாதுனு' சொன்னேன்—காதுல வாங்கிக்கிட்டாதானே? 'உன் தங்கச்சிக்கு இனிமே நாமதான் எல்லாம். போய் இட்டுகிட்டு வந்திடு'னு சொன்னேன். எதைத்தான் அவ லட்சியம் பண்ணினா? ஆனாலும் ஒரு பொம்பளைக்குப் பெத்தவ மேலயும், கூடப் பிறந்த பிறப்பு மேலயும், இத்தனை ஆங்காரம் கூடாதும்மா... இரண்டு மாசம் ஆஸ்பத்திரிலே இருந்திட்டு, நொண்டிகிட்டே வீட்டுக்கு வந்தேன். மூணு, நாலு மாசம் கட்டைய ஊனிக்கிட்டுத்தான் நடந்தேன். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா தேறி, இப்ப ஒரு மாசமா பழையபடி மனுஷனா நடமாடறேன். இல்லேன்னா மீனாட்சிய மீறிக்கிட்டாவது வந்திருக்க மாட்டேனாம்மா?"

கல்யாணிக்குத் தான் கேட்டதை நம்புவது கஷ்டமாக இருந்தது.

மீனாட்சி அத்தனை கிராதகியா?

வாயில்லாப் பூச்சி என்று நினைத்தேன்!

இவன் சொல்வது நிஜம் என்று எப்படி நம்புவது?

அது சரி, என்னிடம் பொய் சொல்லி இவனுக்கு என்ன ஆக வேண்டும்?

பழையபடி துஷ்டனாக இருந்தால் அங்கேயே அக்கடா என்று இருக்க வேண்டியதுதானே? ஏன் என்னைத் தேடிவந்து அத்தனையும் கூறுகிறான்?

பார்த்த வரைக்கும், நடராஜனின் கண்ணீரும், வருத்தமும் உண்மையானதாகப் பட, கல்யாணி பெருமூச்சு விட்டாள்.

"எந்தப் புத்துல என்ன பாம்பு இருக்குமோ-னு சொல்வாங்க! இப்ப மெய்யாலும் எனக்கு யாரை நம்பறதுனு தெரியலை..."

இடிந்து போய் உட்கார்ந்திருந்த நடராஜன் எழுந்து நின்றான்.

"என்னமோ வரணும்னு தோணிச்சு, வந்திட்டேன். அந்தப் பிசாசுக்குத் தெரிஞ்சா, என்னை உண்டு, இல்லேன்னு ஆக்கிடுவா...நா வரேம்மா..."

இரண்டடி வைத்தவன் நின்றான்.



"இந்தக் கேள்விய கேட்க எனக்குத் தகுதி இல்லதான். ஆனாலும் மனசு கேட்க மாட்டேங்குது... தங்கச்சி பார்வதி நல்லா இருக்கு தாம்மா?"

பவ்யமாய் அவன் இப்படிக் கேட்டதும் கல்யாணி உருகிப் போனாள்.

பத்து மாசமாய் மீனாட்சி ஏன் என்று கேட்க வில்லை, பார்வதி எப்படி இருக்கிறாள் என்று ஒரு வரி கடிதம் போடவில்லை.

ஆனால் இவன்?

"உட்காருங்க... காபி சாப்பிட்டுட்டுப்போகலாம். பார்வதி நல்லா இருக்கா. கொஞ்சம் முன்னால வந்திருந்தீங்கன்னா பார்த்திருக்கலாம்... டைபிங் க்ளாஸுக்குப் போயிருக்கா..."

சற்று முன் பார்த்த பெண் பார்வதிதான் என்பது ஊர்ஜிதமாக, எழுந்த குஷியை நடராஜன் லேசாக வெளியிட்டான்.

"சந்தோஷங்க... நீங்களும், அய்யாவும் ரொம்ப உசந்தவங்க... தெய்வம் உங்களை நல்லா வைச்சிருக்கணும்..."

"நீங்க இப்படி மாறிட்டது எனக்கும் ரொம்ப சந்தோஷமா இருக்குங்க... ஏன் எழுந்திட்டீங்க...? உட்காருங்க.... காபி கொண்டு வரேன்..."

"இல்லேம்மா...நா வரேன்... என்னை நீங்க சரியா புரிஞ்சுகிட்டதே விருந்து சாப்பிட்ட மாதிரி நிறைவா இருக்கு"

"பார்வதி பஜாரில் இருக்கிற 'கிருஷ்ணா இன்ஸ்டிட்யூட்டு'க்குத்தான் போயிருக்கா. பன்னிரண்டுக்கு வந்திடுவா... இருந்து பார்த்திட்டுப் போங்க..."

நடராஜன் பணிவுடன் கும்பிட்டான். "மதிய சாப்பாட்டுக்குள்ளார நா ஊருக்குப் போகலைன்னா அவ காட்டுக் கத்தல் கத்துவா... தவிர, வெறுங் கையோட வந்திருக்கறப்ப குழந்தைய சந்திக்கறது நியாயமா? இன்னொரு முறை நிச்சயம் வரேம்மா..."

ரொம்ப சாதுவாகத் தலை குனிந்தபடி வெளியேறிய நடராஜன், அடுத்த பத்தாவது நிமிஷம் 'கிருஷ்ணா இன்ஸ்டிட்யூட் எதிரில் இருந்த பெட்டிக் கடையில் நின்று, சிகரெட் பிடித்தபடி, மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீவிரமாகத் திட்டம் போட முற்பட்டான்.

## 7

பெரிதாய்ச் சிரித்தபடி அந்தக் கட்டடத்தில் இருந்து ஒரு சின்னக் கூட்டம் வெளியில் வந்தது.

நாலைந்து இளவட்டங்கள்.

நடுவில் பார்வதி.

கூடவே இன்னொரு பெண்...

"வரப் போறிங்களா, இல்லையா? தாரிணி, நீங்களாச்சும் சொல்லுங்க..."



கிருதா வைத்திருந்த வாலிபன் வினவ, பார்வதி ஆற்றாமையுடன் பேசினாள்.

"எனக்கு மட்டும் ஆசை இல்லையா நாகேஷ்? வீட்டுல கிழம், போன வாரம் கோவிலுக்குப் போறேன்னு சொல்லிட்டு பீச் போய் வந்தப்பவே ஏன் இத்தனை நேரம்னு முணுமுணுத்தது. எதுக்கும் கொடுப்பினை வேணாமா?"—

"மூணு மணிக்கெல்லாம் திரும்பிடலாம். பயப்படாம வா பாரு.

"இல்லே தாரிணி... இப்ப கண்டிப்பா முடியாது. காலைல கிழத்துக்கு ஆஸ்த்மா இழுப்பு அதிகமா இருந்துச்சு... 'இங்க அங்க பேசிட்டு நிக்காம வந்து வீட்டுல வேலைய பாரு'னு கேட் வரைக்கும் வந்திட்டவளைக் கூப்பிட்டுச் சொல்லி இருக்கு... எதுக்கு வம்பு? எனக்குத்தான் எதுக்கும் கொடுப்பினை இல்லேன்றது தெரிஞ்ச விஷயமாச்சே."

கெஞ்சலாகப் பார்வதி பேசினதும், தோளைக் குலுக்கியபடி இளைஞர்களும், தாரிணி என்கிற பெண்ணும், "பை— நாளைக்குப் பார்க்கலாம்" என்று சொல்லி நகர, அவர்கள் செல்வதையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பார்வதி மெதுவாக நடந்தாள்.

அந்தப் பேச்சு வார்த்தைகள், பெருமூச்சு எல்லாவற்றையும் கேட்டு, பார்த்த நடராஜனால்

கொழுந்தியாளைக் கொஞ்சமாகப் புரிந்து கொள்ள முடிந்தது

தலை குனிந்து வெளியில் வந்தவள், தெரு முனையில் தலைப்பை விசிறி, நடை, பாவனையை மாற்றிக் கொள்கிறாள்.

ஆக, அடக்க ஒடுக்கமாக வேஷம் போட்டு ஓரளவுக்குக் கல்யாணியம்மாவை ஏமாற்றுபவளாகவே இருக்க வேண்டும்.

அதுக்கெல்லாம் கொடுப்பினை வேண்டும்... என்று வாய்க்கு வாய் சொல்லுகிறாள்.

ஆக, மனசில் ஆசைகள் எக்கச்சக்கத்துக்கு இருக்க வேண்டும்.

போன வாரம் கோவிலுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு நண்பர்களுடன் பீச்சுக்குச் சென்று வந்திருக்கிறாள்.

ஆக, பொய் சொல்லி இங்கு அங்கு போகும் வழக்கம் உண்டு என்று புரிகிறது...

பார்வதி பத்தடி நடப்பதற்குள் தனக்குத் தானே கணக்குப் போட்ட நடராஜன் ஒரு முடிவுக்கு வந்தவனாக, பர்ஸை எடுத்துப் பிரித்துப் பார்த்தான்.

இருபத்தோரு ரூபாய் அறுபது பைசா.

சட்டென்று பக்கத்தில் இருந்த ஷாப்பில் ஒரு காட்பரிஸ் சாக்லெட் வாங்கிக் கொண்டான். காலை எட்டிப் போட்டு நடந்து பக்கத்துத் தெருவில் பார்வதி திரும்பு முன் அவளை நெருங்கினான்.



கனிவாக முகத்தை வைத்துக் கொண்டு மெள்ள 'பார்வதி' என்றான்.

நடந்து கொண்டிருந்தவள் நின்றாள்.

லேசான அச்சத்துடன், யார் நீங்கள் என்பது போல ஏறிட்டாள்.

"நல்லா இருக்கியாம்மா?"—

ஆறு வருஷங்களுக்கு முன் பார்த்ததை விட நடராஜன் இப்போது பெருத்து, கருகருவென்று மீசை வளர்த்துக் கொண்டிருந்ததில் அடையாளம் புரியாமல் விழித்தாள்.

"யாரு நீங்க?"—

"என்னைத் தெரியலையாம்மா? நாதான் உன் மாமா நடராஜ்..."

பார்வதி புருவங்களை உயர்த்திக் கொண்டு கண்ணகல நின்றாள்.

எதிரில் நின்றவரை ஊன்றிப் பார்த்தாள்.

வாட்டசாட்டமான உடம்பு, சிவந்த நிறம், சினிமா ஹீரோ மாதிரி க்ராப், மீசை, கச்சிதமாய் பேண்ட், ஷர்ட்... கூலிங் க்ளாஸ்...

மீனாட்சியின் புருஷன் இந்த ஸ்டைல் மனிதரா?

"என்னம்மா, இன்னுமா அடையாளம் புரியலை?"—

சட்டென்று பார்வதி சுதாரித்துக் கொண்டாள். நழுவிய தலைப்பை அவசரமாய் இழுத்துப் போர்த்திக் கொண்டாள். கல்யாணியம்மாவிடம் போய்,ஒன்று கிடக்க ஒன்றை இந்த மனிதர் சொல்லி விட்டால் வம்பாயிற்றே!

இவர் குணம் எனக்குத் தெரியாதா என்ன?

நகை, பணத்தில் பாதி வேண்டும்; தங்கையைக் கூட அழைத்து வரக் கூடாது என்று கூறினவர், எதைத்தான் சொல்லத் தயங்க மாட்டார்!

அவள் சிந்தனை புரிந்த மாதிரி நடராஜன் மெள்ளப் பேசினான்.

"நீ அசந்து போயி நிக்குறதைப் பாக்குறப்ப, உன் மனசுல என்ன நினைக்கறேன்னு என்னால ஓரளவு புரிஞ்சிக்க முடியுது... என்னடா, அம்மா செத்ததுக்கு வராதவன், இத்தனை மாசம் கழிச்சி சாவகாசமா வந்திருக்கானே, நம்பளைப் பத்தி துளி அக்கறை இல்லாதவன் இப்ப திடும்னு முளைச்சி, 'என்னம்மா சௌக்கியமா?'னு கேக்கறானேனு நீ திகைச்சிப் போயிருக்கே... அதானே பார்வதி?... கல்யாணியம்மாவும் இப்படித்தான் ஷாக் ஆயி போனாங்க... எல்லாம் என் போதாத காலம்... நா வேற என்னத்த சொல்ல?"

"நீங்க கல்யாணிம்மாவ பார்த்தீங்களா?"

ஆம் என்று நடராஜ் தலை அசைத்தான்.

"எப்ப?"—



"இப்பத்தான். அரை மணி முன்னாலே... இல்லாட்டி நீ இன்ஸ்டிட்யூட்ல படிக்கறதும், நீதான் பார்வதின்றதும் எனக்கு எப்படித் தெரியும்..."

"......"

"கிருஷ்ணா இன்ஸ்டிட்யூட்ல நீ டைப்பிங் படிக்குறதை அவங்கதான் சொன்னாங்க... அங்க போயி விசாரிச்சப்போ,கிளாஸ் முடிஞ்சிடுச்சு. என்ன பண்ணுவோம்னு யோசிச்சிக்கிட்டே வரேன். முன்னால நீ! உன் கையிலே 'கிருஷ்ணா டைபிங் இன்ஸ்டிட்யூட்'னுபேர் போட்ட புத்தகம்...ரெண்டும் ரெண்டும் நாலுனு கணக்குப் போடறது கஷ்ட மாம்மா..." பேசின நடராஜ் கொஞ்சம் நிறுத்தி, "என்னமா வளர்ந்திட்டே, ஸ்ரீதேவி மாதிரி!" எனவும், குபுக்கென்று பார்வதி சிலிர்த்துப் போனாள்.

அந்தச் சிலிர்ப்பை உணர்ந்து கொண்ட நடராஜ் தொடர்ந்தான்.

"ஆமாம்மா... முன்னே சின்னப் பொண்ணா இருந்த ஸ்ரீதேவி... இன்னிக்குத் திமுதிமுனு வளர்ந்து, டாப் நடிகையாயிட்ட மாதிரிதான் நீயும் வளர்ந்திருக்குறே... ஒரு நிமிஷம் எனக்கு, நம்ம பார்வதிதானா இதுனு ஒண்ணும் புரியலை..."

பார்வதிக்குப் பெருமையாய் இருந்தது. தான் அழகு என்கிற கணிப்பு தவறானதில்லை என்று சந்தோஷமாக இருந்தது.

"தெருவுலே நின்னு பேசறோமே... வர்றியா அந்த ஹோட்டல்ல காபி சாப்பிட்டுகிட்டே பேசலாம்?"—

"அய்யோ... வேணாம்... நாழி ஆச்சு; நா போகணும்..."

"காபி வேணாமா? சரி, ஆனா, ஏன் இப்படி அலறிக்கிட்டு ஓடணும்னு எனக்குப் புரியலை. நீ என்ன கல்யாணிம்மா வீட்டு வேலைக்காரியா? கொஞ்சம் நில்லு பார்வதி. நடந்த விவரம் பூரா நா விளக்க கொஞ்சம் அவகாசம் கொடு. ஆமா, நா ஆக்ஸிடெண்ட் ஆகி படுத்த படுக்கையா கிடந்த சமாசாரம் உனக்காவது தெரியுமா? இல்லே, அந்த கடன்காரி, கல்யாணிம்மா கிட்ட சொல்லாம இருந்த மாதிரி உன்னண்டையும் மறைச்சிட்டாளா?"—

எதுவும் விளங்காமல் பார்வதி விழிக்க, முகத்தைப் படு பரிதாபமாக வைத்துக் கொண்டு, சற்று முன் கல்யாணியம்மாவிடம் சரடுவிட்டதையே மீண்டும் நடராஜன் எடுத்துரைத்தான்.

"உங்கக்கா லேசுப் பட்டவ இல்லே. ஆனாலும் ஒரு பெண்ணுக்கு இத்தனை ஆங்காரம் கூடாது. எத்தனை தரம் கெஞ்சி இருப்பேன் தெரியுமா? 'பாவம் பார்வதி; அவளைக் கூட்டிகிட்டு வந்திடு... எனக்கு எட்டு நூறு சம்பளம் வருது...நம்ம மூணு பசங்களோட நாலாவதா அவளும் இருந்திடட்டும்'னு... எங்க? இந்தப் பேச்சை எடுத்தாலேயே ராட்சஸி மாதிரி கத்துவா... 'அந்தச் சனியன் இங்கே வந்துடுச்சுன்னா நா இருக்க மாட்டேன்'னு சத்தியம் கூட பண்ணினா பார்வதி. சாதாரண சமயமா இருந்தா, சரிதான் போடினு அடக்கிட்டு நா வந்து, ஆம்பளையா லட்சணமா எல்லாத்



தையும் கவனிச்சிருப்பேன்... ஆனா... எங்க? நாதான் காலொடிஞ்சி, கையொடிஞ்சி நாலு மாசம் ஆஸ்பத்திரியில் கிடந்தேனே... இப்ப அதுக்கு வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்?... ஆனாலும் இவ்வளவு குணம் கெட்டு அவ போயிட்டதுல எனக்கு ரொம்ப வருத்தம். பொறுப்பை எடுத்துக் காதது மட்டுமில்லாம, பழிய வேற என் பேர்ல சுமத்தியிருக்குறா... ஊஹும்! விதி இப்படினு இருக்குறப்ப யாரை நொந்துக் கிடறது... இப்பவாது உனக்கு உண்மை புரிஞ்சா, சந்தோஷம்... சரி, நாழியாயிட்டது... நா கிளம்பறேன். நீ நல்லா இருக்கியா? அத சொல்லு...காது குளிரக் கேட்டுட்டுப் போயிடறேன்..."

கல்யாணியம்மா திக்பிரமை பிடித்து நின்றது போலவே, பார்வதியும் நின்றாள். பின், அந்தப் பேச்சும், முக பாவமும் புத்தியை மழுங்க அடிக்க, மாமா கூறுவது உண்மைதானோ என்று நம்ப முற்பட்டாள்.

கூடவே கரிசனத்துடன் ஒருவர், 'நீ நல்லா இருக்கியா?' என்று கேட்டது சுய பச்சாதாபத்தையும் கிளறி விட்டது

"என்னமோ இருக்கேன் மாமா... போடற சோத்துக்கும், படிக்க வைக்கறதுக்கும் நாயா உழைச்சிட்டு இருக்கேன். நா எப்படிப் போனா யாருக்கு என்ன கவலை?"—

"அ... அ... அப்படிச் சொல்லிட்டா? நா ஒருத்தன் இல்லியா? இத்தனை மாசமா எட்டிக்கூட

பார்க்காததை வைச்சிக்கிட்டு அப்படிப் பேசாத... இனிமே பாரு... நீ போங்க மாமானு தள்ளினாலும் உன்னை ஆளாக்கி, ஒரு நல்ல நிலைமைல பாக்குற வரைக்கும் நா விட மாட்டேன்..."

"வீட்டுக்கு வாங்களேன்... நிதானமா பேசிட்டுப் போகலாம்..."

"இன்னிக்கு வேணாம்மா... உனக்கும் வீட்டுலே வேலை இருக்கும். செய்ய விடாம நா வந்திட்டதா கல்யாணிம்மா நினைப்பாங்க... சீக்கிரமே மறுபடி வரேன். இந்தா... உனக்குன்னு வாங்கிட்டு வந்தேன்... பிடிக்குமில்லே?"—

முழு காட்பரிஸ் சாக்லெட்...

"இதையும் வைச்சிக்க... இருக்கட்டும்... கைச் செலவுக்கு வேணாமா? அடுத்த முறை வர்றப்ப உனக்கு என்ன வாங்கிட்டு வரட்டும், சொல்லு...... உங்கக்காவுக்குத் தெரிஞ்சா என்னை வீட்டுல சேர்க்காம கூறு போட்டுடுவா. பரவாயில்லே. இத்தனை வருஷங்களா நீ கஷ்டப்பட்டது போதும். இனியாவது கொஞ்சம் சுகப்பட வேணாமா? ஹூம்... இத்தனை அழகை வைச்சிட்டு ஏழை வீட்டுல பொறக்கணுமா? ஒரு வசதியான இடத்துக்கு மகளா இருந்தா இன்னும் எத்தனை அழகா, வசதியா, உயர்வா வாழலாம்... தெய்வத்துக்குக் கண்ணில்லே, அதான் நான் சொல்லுவேன்..."

கால் மணி நேரச் சந்திப்பில் பார்வதி அப்பட்டமாக நடராஜனை நம்ப முற்பட்டதோடு, அவன்



பேச்சு, பெருமூச்சு, பரிவு இவைகளில் க்ளீன் போல்ட் ஆகி, ஆஹா, மாமா மாதிரி ஒரு நல்லவர் இருக்கவே முடியாது என்று தீர்மானம் செய்யும் அளவுக்குப் போய் விட்டு,

"வரேன் மாமா— அடிக்கடி வாங்க!" என்று அவன் நீட்டிய சாக்லெட், பத்து ரூபாய்ப் பணத்தைப் பெற்றுக் கொண்டு திரும்ப, நடராஜ் "பார்வதி" என்றான் சின்னக் குரலில்.

"என்ன மாமா?"—

"நா உன்னைச் சந்திச்சது கல்யாணியம்மாவுக்குத் தெரிய வேணாம்னே நினைக்கிறேன். வயசுப் பெண்ணை நடுத் தெருவுல நீக்க வைச்சி பேசியிருக்கானே-னு கோவப்படலாம். அவங்களா நா வந்து போன சேதிய சொன்னா கேட்டுக்க... நீ ஒண்ணும் சொல்ல வேணாம்... உன் நல்லதுக்குத் தான் சொல்றேன்... என்னம்மா?"—

சரி என்று தலை ஆட்டி விட்டு வீட்டுக்குப் பார்வதி வரவும், அவள் வரவுக்காகக் காத்திருந்த கல்யாணி 'ஓஹோ' என்று நடராஜனைப் புகழ்ந்து, 'இவனைப் போய் இத்தனை வருஷங்களாகத் தவறாய் நினைத்திருந்தோமே!' என்று வேறு சொல்ல, மாமா பற்றின மதிப்பு இன்னும் அதிகமாக, அடுத்த முறை அவர் எப்பொழுது வருவார் என்ற எதிர்பார்ப்பு அவளிடம் ஏகத்துக்குக் கூடிப் போனது.

பார்வதியை அனுப்பி விட்டு, பஸ் நிலையத்தைப் பார்க்க நடந்த நடராஜனுக்குள் மகிழ்ச்சி நீரூற்றாகப் பொங்கியது.

எத்தனை சுலபமாக ஏமாந்து விட்டார்கள்?

கொஞ்சம் கண்ணீரும், கொஞ்சம் பரிதாப பாவனையும் எதைத்தான் சாதிக்காது?

விஸில் அடித்தபடி பஸ் பிடித்து ஏறியவனுக்குச் செங்கல்பட்டு வருவதற்குள் அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்து போக, நேராக அலுவலகத்துக்குச் சென்று முதலாளி முன் நின்றான்.

வெளியில் கன்னாபின்னாவென்று விளையாடினாலும், வேலையில் கெட்டி என்பதோடு, அலுவலகத்தில் நடத்தையும் ஒழுங்கு என்பதால் நடராஜ் மேல் முதலாளிக்கு அன்பு உண்டு

"என்னய்யா... லீவு போட்டுட்டு மூணு மணிக்கு வந்து நிக்குறே?"

"எதிர்பாராத பிரச்சினைங்க... என் கொழுந்தியாளுக்கு டி.பி. உடனடியா மெட்ராஸ் டாக்டர் கிட்டே வைத்தியம் பார்க்கப் பணம் தேவைப்படுதுங்க. பெரிய மனசு பண்ணி கொடுத்திட்டு மாசம் கொஞ்சமா பிடிச்சிக்குங்க..."

முதலாளி தந்த முந்நூறு ரூபாயில் நூறை முதல் நாள் சீட்டுக் கடனுக்குக் கொடுத்தான்.

மிச்சத்தைப் பத்திரமாக அலமாரியில் பார்வதியைச் சந்திக்கும் போது செலவழிக்க என வைத்துப் பூட்டினான்.

பார்வதி தன்னைத் தவறாக எண்ணிவிடக் கூடாது என்ற அக்கறையுடன் சில நாட்களைக்



கடத்திவிட்டு, பத்து நாள் கழித்து, ஒரு ஞாயிறு சென்று பார்த்தான். பின் அடுத்த ஞாயிறு; அப்புறம்...

## 8

"பார்வதி!"—

"ம்."

"நீ எவ்வளொ அழகாயிருக்கே தெரியுமா?"—

"உங்களுக்கு இதே விளையாட்டா போச்சி மாமா...என்னைப் பாக்குறப்ப எல்லாம் சும்மானாலும் சொல்றீங்க..."

"சத்தியமா விளையாடலை, பார்வதி...உன் அழகும், தளதளன்ற உடம்பும் கண்ணைப் பறிக்குறது நிஜம். அந்த சர்வர் உன்னையே வைச்ச கண் வாங்காமல் பாக்கறான் பாரு...அங்க பாரு... அந்தத் தொங்கு மீசைக்காரன் காபி ஆறிப் போறதைக் கூடக் கவனிக்காம உன்னையே ஸைட் அடிக்கிறான்..."

"போங்க மாமா..."

"எங்க போறது? அதான் புரியாம முழிச்சுட்டு இருக்கேன். இந்த ஹோட்டலும், இந்த த்ராபை ஸ்வீட், காரமும் எனக்கு அலுத்திடுச்சி! ஒரு மாசமாயிட்டது... இன்னும் இதை விட்டா நமக்கு வேற போக்கிடம் இல்லே..."

"என்ன பண்ணறது மாமா...இன்ஸ்ட்டிட்யூட்டுக்கு கிட்டக்க இருக்குற இடத்துல இதானே கொஞ்சம் நல்லா இருக்கு..."

நடராஜன் பதில் சொல்லாமல் சிகரெட்டைப் பற்ற வைத்து, மோதிர நடு விரல்களுக்கு இடுக்கில் செருகிக் கொண்டு, புகை பிடிக்கத் துவங்க, பார்வதி அவனையே தீர்க்கமாகப் பார்த்தாள்.

"என்ன பார்க்குறே?"—

"ஒண்ணுமில்லே!"

"சொல்லப் போறியா, இல்லியா?"—

"எத்தனை ஸ்டைலா சிகரெட் பிடிக்கறீங்க, ரஜனிகாந்தாட்டம்னு நினைச்சேன்..."

நடராஜன் முன்னால் சாய்ந்து கண்களைச் சிமிட்டினான்.

"இது ஒண்ணுத்துக்கே இப்படிச் சொல்றியா? நா எது செஞ்சாலும் ஸ்டைலாதான் செய்வேன் தெரியுமா?"—

வேண்டுமென்று 'எது செஞ்சாலும்' என்ற வார்த்தைகளை அழுத்திச் சொல்ல, பார்வதி அதன் அர்த்தம் புரிந்து வெட்கப்பட்டாள்.

இது ஆறாவது சந்திப்பு என்பதோடு, தான் பேசுவதெல்லாவற்றையும் அவள் ரசிப்பது தைரியத்தைத் தர, மேஜைமேல் இருந்த பார்வதியின் கை மேல் தன் கையை நடராஜன் வைத்தான்.



பார்வதி கையை இழுத்துக் கொள்ளவில்லை.

மாறாக, "என்ன மாமா, இது" என்று சின்னக் குரலில் கெஞ்சினாள்.

"எது?"—

"போங்க மாமா..."

நடராஜன் அவள் விரல்களை அழுத்தினான்.

"வீட்டு வேலைகளைச் செய்யறப்பவே இத்தனை ஸாஃப்ட்டா இருக்குதே, இன்னும் பெரிய மனுஷங்க வீட்டுப் பொண்கள் மாதிரி லோஷன் எல்லாம் தடவிகிட்டா எப்படி இருக்கும்?"—

"லோஷனா? கைக்குக் கூடவா?"—

"தெரியாது உனக்கு? கல்யாணமான புதுசுல மீனாட்சிக்கு எல்லாம் வாங்கித் தந்திருக்கேன். ஒண்ணையும் உபயோகப்படுத்த மாட்டா...தூக்கித் தூக்கி என் மூஞ்சிலேயே எறிவா..."

"அக்கா அப்படிச் செய்தான்னா நம்ப முடியலை மாமா...பார்க்க எத்தனை சாதுவா இருக்குறா!"

"அதான் எனக்குக் கடவுள் கொடுத்த பெரிய தண்டனை, பார்வதி... தனியா இருக்குறப்போ கத்துவா, நகத்தால பிறாண்டுவா...அழுவா... மொரட்டுத் தனமா நடந்துக்குவா...ஆனா, நாலு பேர் முன்னால் பசு மாதிரி இருப்பா..."

"அம்மாகூட நீங்கதான் முரடு, அக்கா சாதுனு சொல்லுவாங்க, மாமா..."

"அதுவும் ஒரு விதத்துல சரிதான். பெண்டாட்டி இப்படினு வெளிப்படையா வருத்தப் பட்டுக்க முடியுமா? வெட்கம் இல்லியா? தவிர இவ இப்படி முரண்டு பண்ணதுல, ஆரம்ப நாட்கள்ல எல்லாம் வெறுத்துப் போயி, நானும் பதிலுக்கு முரட்டுத்தனமா நடந்து கிட்டது நிஜம்தான்..."

"அப்புறம்?"—

"இரண்டாவது பிரசவத்துப்ப டாக்டர் என்னை தனியா கூப்பிட்டு, 'உங்க மனைவிக்கு ஹிஸ்டிரியா நோய் இருக்கு'னு சொன்னப்புறம்தான், சரி, இதெல்லாம் நம்ம தலையெழுத்து, அனுபவிக்க வேண்டியதுனு மாறத் துவங்கிட்டேன். அதுக்குள்ள உங்கம்மாவையும், உன்னையும் கண்டா அவளுக்கு ஆகாம போயிடிச்சி...கடைசிலே நா மாறிட்டது தெரியாமலேயே கமலம்மா போயிட்டாங்க..."

மிகுந்த வருத்தத்துடன் அவன் பேசுவதாகத் தோன்ற, பார்வதி, "விடுங்க மாமா...நா புரிஞ்சி கிட்டேனே!" என்று சொல்லி அவன் கையை மெள்ள அழுத்தினாள்.

அந்தச் செய்கை துளிர்ச்சலை அதிகமாக்கச் செருப்பைக் கழற்றிவிட்டு, நடராஜன் அவள் பாதங் களைக் காலால் வருடிக் கொடுத்தான்.

"கைக்கு லோஷன் வாங்கித் தரேன், தடவிக் கிறியா? ஏன் நகங்கள்ல நெயில் பாலிஷ் உறிஞ்சி போயிருக்கு? கடைக்கு வர்றியா, புதுசா நாலு கலர் வாங்கித் தரேன்..."



பார்வதி கிளுகிளுத்துப் போனாள்.

பெருமூச்சுடன், "வேணாம் மாமா... கிழத்துக் கிட்டேயிருந்து மறைக்குறது கஷ்டம். நீங்க இத் தனை ஆசையா சொல்லறதை மறுக்கறேன்னு நெனைக்காதீங்க... எனக்குக் கொடுப்பினை அவ்வளவுதான்!" என,

நடராஜன் சட்டென்று குரலை உயர்த்தினான்.

"இன்னொரு தரம் என் காதுபட இந்த வார்த் தைய சொல்லாத... உனக்கு என்ன? ராஜாத்தி .. ராணி... உன்னை எங்க கொண்டு நா வைக்கறேன் பாரு..."

"ஷ், மாமா... பக்கத்து மேஜைக்காரங்க கவனிக் கறாங்க..."

சிகரெட்டை அணைத்த நடராஜன் 'ஸாரி' என்றான். ஒரு நிமிஷம் தயங்கி விட்டு, "இப்படிப் பயந்து சாகறதுல அர்த்தமே இல்லே, பார்வதி... எத்தனை அழகு இவ, பாருங்கடா-னு சொல்றாப் பல உன்னை எல்லா இடத்துக்கும் கூட்டிட்டுப் போயி பெருமைப் படணும் போல இருக்கு. ஒரு சினிமாவுக்குப் போறோம், பீச்சில போயி காத்தாட உட்கார்ந்தோம்னு, இல்லாம என்னம்மா இது?" என்று சலிக்க பார்வதி மௌனம் சாதித்தாள்.

"உனக்கு சினிமா பிடிக்குமா, பார்வதி?"—

"ரொ...ம்...ப..."

"போலாமா?"—

"எப்படி?"—

"க்ளாஸுக்கு கட் அடிச்சிட்டுத்தான்..."

"பயமா இருக்கு, மாமா..."

"என்ன பயம், நா கூட வரேன் இல்லே."

"........."

"நா சொல்றதைக் கேக்குறியா? நாளன்னிக்கு எனக்கு ஆபீஸ் லீவு. ஒரு மணிக்கெல்லாம் காத்திட்டு இருக்கேன். காலை க்ளாஸை மதியத்துக்கு மாத்திட்டாங்கனு சொல்லிட்டு நீ வந்திடு. ஜாலியா சினிமாவுக்குப் போயிட்டு, டிபன் சாப்டுட்டு வருவோம்... என்ன?"—

"பயமா இருக்கு, மாமா..."

"எந்தப் படத்துக்குப் போகணும், சொல்லு... புதுப் படம் எது வேணா சொல்லு. ப்ளாக்ல வாங்கியாவது உன்னை பால்கனிக்கு கூட்டிட்டுப் போறேன்..."

"மாமா..."

பார்வதியின் பயத்தை அடித்து விரட்டி விட்டு, திட்டம் போட்டது போல அந்தப் புதன் அவளோடு பாக்கியராஜ் படத்துக்குச் செல்லவே செய்தான்.

இருட்டைப் பயன்படுத்திக் கொண்டு அவன் செய்த சேஷ்டைக்கெல்லாம் மறுப்பு சொல்லாமல் பார்வதி ஈடு கொடுக்க, இரண்டரை மணி நேரம் போனது தெரியாமல் வெளியில் வந்தார்கள்.



இதுதான் ஆரம்பம்.

அடுத்து வந்த பதினைந்து நாட்களில் இன்னும் இரண்டு சினிமாக்கள் - ஒரு தரம் பீச், சுடும் நாலு மணி வெயிலில், மணலைப் பொருட்படுத்தாமல்...

மேலும் ஒரு மாசம் போவதற்குள் வேகம் அதிகமாகித் தாங்க முடியாது போக, நீண்ட நேர யோசனைக்குப் பின் அன்று வந்த போது நடராஜன் கையில் ஒரு காகிதப் பொட்டலம்.

"என்ன மாமா?"—

"பிரிச்சுத்தான் பாரேன்."

பிரித்தால்... ஜிலுஜிலுவென்று ஒரு டிஸ்கோ ஸாரி...

"அய்... யாருக்கு மாமா இது! எனக்கா?"

"பிடிச்சிருக்கா?"—

"ரொம்...ப..."

புடவையைத் தடவிப் பார்த்து சந்தோஷித்தவள், திடுக்கிட்ட மாதிரி சொன்னாள்.

"அய்யைய்யோ... வேணாம் மாமா... கிழத்துக்குத் தெரியாம வைச்சிக்கறது கஷ்டம்... நீங்களே எடுத்திட்டுப் போயிடுங்க..."

"எப்படியாவது மறைக்க முடியாதா பார்வதி? உனக்குனு ரொம்ப ஆசையா வாங்கிட்டு வந்திருக்கேனே!"

"எனக்குந்தான் உடனே உடுத்திப் பார்க்க ணும்னு பரபரக்குது... ஆனா... ஆனா..."

ஏமாற்றத்தில் கண்கள் கலங்கிப் போக, பார்வதி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"ஒண்ணு சொன்னா கேப்பியா?"—

"சொல்லுங்க..."

"தப்பா எடுக்கக் கூடாது."

"என்ன மாமா... உங்களையா நா தப்பா எடுப்பேன்?"

நடராஜன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, புகையை இழுத்து நாசிகளால் வெளியிட்டான்.

"இந்தப் புடவையை நீ உடுத்திக்கிட்டா எப்படி இருப்பே தெரியுமா, பார்வதி. சும்மா தேவதை மாதிரி... ஹா... நினைப்பே... இனிக்குது... இந்தப் புடவையை கட்டிகிட்டு, துளி பௌடர் போட்டு, லிப்ஸ்டிக் பூசி, கொஞ்சம் செண்டும் தெளிச்சி, நெத்தில முடி பறக்க நீ வந்தின்னா, எப்படி இருப்பே தெரியுமா? உன்னால அப்படி உன்னைக் கற்பனை பண்ணி பார்க்க முடியாதா?"

பார்வதியின் கண்கள் மயக்கத்தில் ஆழ்ந்தன.

சட்டைப் பையிலிருந்து ஒரு மெஜந்தா கலர் நெயில் பாலிஷ், சிவப்பு லிப்ஸ்டிக், சின்ன செண்ட் புட்டி ஒன்று என்று மேஜை மேல் நடராஜன் அடுக்க, பார்வதி அசந்து போனாள்.



"இத்தனையும் எனக்கா மாமா? என் மேல உங்களுக்குத்தான் எத்தனை ஆசை..."

"எனக்கு இருந்து என்ன பிரயோசனம்? உனக்கு இல்லியே..."

"ஏம்மாமா இப்படிப் பேசறீங்க? உங்க பேர்ல நா உசிரையே வைச்சிருக்கிறது தெரியாதா?"—

"அப்ப, நா எது சொன்னாலும் கேட்பே?"—

"கண்டிப்பா..."

"சரி... கிளம்பு..."

"எங்க மாமா... ?"

"வேற எங்க, சினிமாவுக்குத்தான். 'இளமைக் காலங்களு'க்கு டிக்கெட் எடுத்திருக்கேன்...."

"இதெல்லாம்?"—

"வாங்குறப்ப இத்தனையும் போட வைச்சி உன்னை இன்னிக்கு படத்துக்கு அழைச்சிட்டுப் போகணும்னு பிளான்... ஆனா, எங்க?"—

"எனக்கும் ஆசையாதான் இருக்கு மாமா, வழிதான் தெரியலை..."

"நா சொல்லட்டுமா?—"

"சொல்லுங்க..."

"கேட்டுட்டு மாட்டேன்னு சொல்லக் கூடாது."

"இல்லே... சொல்லுங்க."

"காசு போனா பரவாயில்லேனு, ஒரு ஹோட்டலுக்குப் போய் அறை எடுப்போம். நீ புடவை

மாத்திக்கிட்டு, ஜம்முனு நா விருப்பப்படற மாதிரி ட்ரெஸ் பண்ணிக்க... சினிமா போயிட்டு, திரும்ப ஹோட்டலுக்குப் போய் பழையபடி, மாத்தினப்புறம், வீட்டுக்குப் போயிடலாம்... எப்படி ஐடியா?"

பார்வதி தயங்கினாள்.

"உனக்கு இஷ்டமில்லாட்டா வேணாம்... தேவதை மாதிரி உன்னைப் பார்க்கணும் போல இருந்திச்சு... சொன்னேன். பரவாயில்லை. விடு...'

"இருங்க மாமா... எனக்கு இஷ்டம் இல்லேன்னா சொன்னேன்? நாழி ஆயிடுமேனு தான் பயப்படறேன்..."

"ஓரளவுக்கு மேல நீ கல்யாணிம்மாவுக்குப் பயப்படறது அனாவசியம், பார்வதி... அவங்க என்ன உன்னைப் பெத்தவங்களா? மாமா எனக்கு இல்லாத உரிமையா?"

"கிட்டத்தட்ட பதினைஞ்சு நாள் போல நா கிளாஸுக்குப் போகவேயில்லே, மாமா..."

"தினமுமா கட்பண்றே? நா எப்பவாவது வர்றப்ப தானே! என்ன, கிளம்பலாமா வேணாமா?"—

கிளம்பினார்கள்.

முன் கூட்டியே நடராஜன் யோசித்து வைத்திருந்த லாட்ஜில் அறை எடுத்தார்கள்.

பார்வதி புதுப் புடவையைப் பாங்குற உடுத்தித் தன் அழகு எடுபட நின்றதும் இரண்டு



பேருமே வெகுவாக உணர்ச்சி வசப்பட்டுப் போக, சினிமாவுக்குச் செல்லும் திட்டம் கை விடப்பட்டு, அடுத்த மூன்று மணி நேரங்களையும் அந்த அறையிலேயே மனம் போலக் கழித்து மகிழ்ந் தார்கள்.

அன்றைக்கு அவளைத் தெரு முனையில் விட்டு விட்டு நடராஜன் புறப்பட்ட போதுதான் பார்வதி அவன் கையைப் பற்றி, "இனி உங்களைப் பிரிஞ்சி என்னால நொடிக்கூட இருக்க முடியாது, மாமா"— என்றாள் மிகுந்த காதலுடன்.

## 9

தரையில் சிகரெட் துண்டங்கள் வாரி இறைந் திருந்தன.

சுவரோரமாய்க் காலியாகி விட்ட டிபன் தட்டுகள்.

அறை புகை மூட்டமாய் இருந்தது.

படுக்கையில் நடராஜன். அவன் தோளில் தலை வைத்தபடி பார்வதி.

இரண்டு பேர் முகங்களிலும் அசதி, சந்தோஷம், நிறைவு.

"என்ன மாமா, பேசவே மாட்டேங்கறீங்க? தீவிரமா என்னத்த யோசிச்சிட்டு இருக்கீங்க?"—

"ம்?"—

"சொல்லுங்க மாமா...வந்ததுலேந்து நானும் பார்க்கறேன், பேச்சு அதிகம் காணோமே!"

"சொல்றேன். எப்படியும் சொல்லிடறதுன்ற முடிவோடத்தான் நானே வந்திருக்கேன்."

"......"

"ஹோட்டல்ல அறை எடுத்து நாம சந்திக்குறது இது நாலாவது முறை... ஒவ்வொரு தரமும் ஏகத்துக்கு பயந்து சாகுறதோட, காசும் தண்ணியா செலவழியுது. அட, காசு போனா பரவாயில்லேன் னாலும், மனசுலே ஒரு திருப்தி இல்லே...இப்படி ஒரு மணி, இரண்டு மணி நேரம் மட்டும் உன்னோட இருக்குறது பத்தாதுனு மனசு கிடந்து அடிச்சுகுது...!"

"எனக்கும் அப்படித்தான் இருக்கு, மாமா... எப்பவும் உங்களோடயே இருக்கணும், பிரியவே கூடாதுனு தோணுது. நா அன்னிக்கே சொல்லலை?"—

"சொன்னதான்... ஆனா, இதுக்கு என்ன வழினுதானே புரியலை."

"நா ஒண்ணு சொன்னா கோவிக்க மாட்டீங்களே?"—

நடராஜன் அவளை இறுக அணைத்து முத்த மிட்டான்.

"என் ராஜாத்திய கோவிப்பேனா? என் உசிரே நீ ஆச்சே."



"இந்த வார்த்தை பொய்யில்லியே மாமா?"—

"உம் மேல சத்தியமா நிஜம்."

"அப்ப சரி— என்னை உங்களோடேயே கூட்டிட்டு போயிடுங்க."

"எங்க?"

"செங்கல்பட்டுக்குத்தான்."

"உன் கழுத்துல ஒரு தாலிய கட்டி என் சொத்தாக்கிக்கத்தான் எனக்கும் ஆசை. ஆனா, நீ என்ன சொல்வியோன்னு நினைச்சிதான்..."

"ச்சீ... நா என்ன சொல்லப் போறேன்?"—

"இல்லே பார்வதி... எனக்கு வயசு முப்பத்தி நாலு, உனக்கு பதினாறுதான், அதான்..."

பார்வதி அவன் மார்பில் தலையை லேசாக முட்டினாள்.

"இந்தக் கணக்கெல்லாம் எனக்குத் தெரியாது மாமா... எனக்கு நீங்க வேணும்.... நா எப்பவும் உங்க கூடவே இருக்கணும். அதான் சொல்லத்தெரியுது..."

"நா கொடுத்து வைச்சவன், பார்வதி."

"நானும்தான் மாமா... உங்களுக்கு என்ன குறை? ராஜா மாதிரி கம்பீரமா இருக்கீங்க; கை நிறைய சம்பாதிக்கறீங்க; வாழ்க்கைல ஒரு சுகமும் இல்லாம, வேலைக்காரி மாதிரி வாழ்ந்திட்டிருந்த என்னை, பக்கத்துல தூக்கி உட்கார வைச்சி, ராணி யாட்டம் நடத்தறீங்க"—

"ஏய்.. ஏய்... பக்கத்துலனு சொல்லாத; மடில... தலைல வைச்சிருக்கேன்றதுதான் சரி..."

நடராஜன் கொஞ்ச, பார்வதி சிரித்தாள்.

"காபி சாப்பிடுவோமா?"—

"ம்"—

எழுந்து போய் காபி ஆர்டர் பண்ணி விட்டு அவன் திரும்பிய போது, பார்வதி நெற்றி சுருங்க அமர்ந்திருந்தாள்.

"இப்ப, உனக்கு என்ன யோசனை?"—

"இரண்டு பேரை நினைச்சா பகீர்ன்னுது மாமா... அக்கா, கல்யாணிம்மா இவங்களை எப்படி சமாளிக்கப் போறோம்?"—

"அதுக்கெல்லாம் திட்டம் வைக்காம இருப்பேனா? ஏன் வீணா கவலைப்படுறே?"—

"அக்கா இதுக்கு சம்மதிக்கலைனா?"—

"சம்மதிச்சிதான் ஆகணும்... வேற வழி?"—

"உங்களோட சண்டை போட மாட்டாளா மாமா?"—

"அ? அவளுக்கு அத்தனை தைரியம் உண்டா?"

பார்வதி கண்களை இடுக்கினாள்.

"ஒரேயடியா கத்துவா, ஹிஸ்டிரியா நோய் பிடிச்சதுலேந்து குணம் கெட்டுப் போயிட்டானு சொன்னீங்க?"



"சொன்னேன் தான்...ஆனா அதுக்குப் பயந்து கிட்டு உன்னை விட்டுட முடியுமா? உன்கூடப் பழகத்துவங்கிட்ட நாளாவே நா பழையபடி இல்லே.. அவளை வைக்குற இடத்தில வைச்சிகிட்டுதான் இருக்கேன்...பின்னே? குட்டக் குட்ட குனிஞ்சு கிட்டே இருக்க முடியுமா? எனக்குனு ஒரு சுகம், வாழ்க்கை சந்தோஷம் வேணாமா?"

பார்வதி அருகில் வந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

"பாவம் மாமா நீங்க! அக்கா கிட்ட இத்தனை வருஷமா எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கீங்க? பரவா யில்லே... விடுங்க... நா வந்து அத்தனையும் ஈடு கட்டி உங்களைச் சந்தோஷமா வைச்சிக்கறேன், பாருங்க..."

"செய்வே...செய்வே...இப்பவே இந்த இரண்டு மாசமா நா சொர்க்கத்துலதானே மிதந்துகிட்டு இருக்கேன்..."

காபி வந்தது.

குடித்தார்கள்.

"கல்யாணிம்மா கிட்ட என்ன சொல்லப் போறீங்க, மாமா?"

"ஒரு சின்ன நாடகம் போட்டுத்தான் ஆகணும். நம்பினாங்கன்னா சரி. இல்லே, எகிறினாங்கன்னா? நானும் முரட்டுத்தனமா நடந்துக்க வேண்டியது தான். உங்கக்காவயே அதட்டி உட்கார வைக்கப்

போறப்ப இவங்களையா சமாளிக்க முடியாது... வழி வைச்சிருக்கேன்''—

''வரவர... அவங்க என்னை ரொம்பத்தான் திட்றாங்க, மாமா. லேட்டா வீட்டுக்குப் போறப்ப எல்லாம் அர்ச்சனைதான். ரொம்ப துளுத்துப் போயிட்டேனாம். மரியாதை குறைஞ்சிடுச்சாம். பரீட்சை எழுதற நாள் கிட்ட வந்திட்டதால, இனி இவங்க தயவு வேணாம்னு திமிரா இருக்கேனாம்— சொல்றாங்க...''

''ஆமா, நானே கேக்கணும்னு நினைச்சேன். உனக்கு பரிட்சை எப்ப?''—

''இன்னும் பதினைஞ்சி நாள்ல... ஆனா, மாமா, இரண்டு மாசமா நா ஒழுங்காவே க்ளாஸுக்குப் போகாததுல ப்ராக்டிஸ் விட்டுப் போச்சி...''

''பரிட்சைக்குப் பணம் கட்டிட்டே இல்லே?''—

''கட்டிட்டேன். ஆனா, ஸ்பீட் இல்லே. நிச்சயம் பெயில் ஆயிடுவேன்.''

பார்வதி அவன் கன்னத்தோடு கன்னத்தை வைத்தாள்.

''எனக்கு பரிட்சைக்குப் போக விருப்பம் இல்லே, மாமா.''

''சரி வேணாம்... விடு...''

சட்டென்று சம்மதித்து விட, மகிழ்ச்சியுடன் பார்வதி அவன் மடியில் சரிந்தாள்.



''எல்லாத்தையும் விட்டுட்டு, உடனே உங்களோட வந்திடணும்னு இருக்கு, மாமா...''

''ம்ம்...'' நடராஜன் யோசித்தான்.

''இன்னும் நாலு நாள்ல நா வர்றப்ப நல்ல சேதி யோட வர்றேன். சொல்லிக் கொடுக்கிறபடி நீ நடந்துகிட்டா பிரச்சனையே இல்ல... கல்யாணிம் மாவ பத்தி கவலைப்படாதே... என்ன?''

சொன்னபடி அந்த வியாழக் கிழமை மாலை நடராஜன் கல்யாணியம்மாவின் வீட்டுக்கு வந்தான்.

கல்யாணி அன்பாக வரவேற்றாள்.

நடுவில் ஓரிரு முறைகள் பூ பழத்தோடு வந்து, அடக்கமாய் அரை மணி உட்கார்ந்திருந்துவிட்டுப் போயிருந்ததில் அவன் மேல் அவளுக்கு உண்மை யிலேயே நல்ல அபிப்ராயம் உண்டாகி இருந்தது.

''வாங்க... என்ன ஒரு மாசமா இந்தப் பக்கம் காணோம்?''—

நடராஜன் பெருமூச்சு விட்டான். கலைந்திருந்த முடியைக் கோதிக் கொண்டான். எழும்பிய கண்ணீரை அடக்குபவன் போலக் கஷ்டப்பட்டுப் பேசினான்.

''தெய்வம் என் தலைல கல்லைத் தூக்கிப் போட்டிருச்சும்மா.. மீனாட்சிக்கு கான்ஸர். அதான் அப்படி உருத் தெரியாம இளைச்சிருந்திருக்கிறா. வயித்து வலி தாங்க முடியாம போனப்புறம்தான் வெளில சொன்னா. பதறிகிட்டு பெரிய டாக்டர்

கிட்ட கூட்டிகிட்டுப் போனேன். 'மோசம் போயிட்டே; வியாதி முத்திடிச்சி'னு கெடு வைச்சிட்டார். இன்னும் இரண்டு மூணு மாசம் அதிகபட்சம் அவ உசிரோட இருந்தா அதிசயமாம். நா... நா... என்னம்மா பண்ணுவேன்?''

கதவு பக்கமாகநின்று அத்தனையையும்கேட்டுக் கொண்டிருந்த பார்வதிக்குச் சிரிக்கத் தோன்றியது.

அதிர்ந்து போயிருக்கும் கல்யாணியம்மா தன்னைப் பார்த்துவிடக் கூடாது என்கிற அவசரத் துடன் நகர்ந்து கொண்டாள்.

"தனக்கு இப்படி நோய் வந்திட்டதுனு தெரிஞ்ச நாள்லேந்து மீனாட்சி ரொம்பத்தான் மாறிட்டா. தங்கச்சிய பார்க்கணும்னு துடிக்குறா... தன்னோட அவளை இந்தக் கடைசிக் காலத்துலயாவது வைச்சிக்கணும்னு ஏங்குறா... பெரிய மனசு பண்ணி பார்வதிய அனுப்பி வைச்சிங்கன்னா தேவலை..."

"அனுப்புறதுதான் மனுஷத்தனம். ஆனா, இன்னும் பத்து நாள்ல அவளுக்குப் பரிட்சை வருதே?"

"அது பாத்தா முடியுமாம்மா? அடுத்த பரிட்சைக்குப் போக வேண்டியதுதான். சாகக் கிடக்குற அக்காவ விட, பரிட்சையா முக்கியம், சொல்லுங்க?"

"பத்து நாள்ல பரிட்சை முடிஞ்சதும் அழைச் சிட்டுப் போங்களேன். ஆறு மாசமா படிச்சது வீணாக வேணாம்னுதான் சொல்றேன்."—



இந்த நிமிஷத்தில் பார்வதி உள்ளிருந்து நீர் பெருகும் கண்களுடன் ஓடி வந்தாள்.

"நீங்க பேசினதைக் கேட்டுட்டு இருந் தேன்ம்மா... அக்காவ உடனே பார்க்கணும் போல எனக்குப் பரபரக்குது.... சாகக் கிடக்குறவகூட இருக்கறதுதாம்மா எனக்கு முக்கியம். படிப்பு, பரிட்சை இனிமே புத்தி போகாது... என் தவிப்பைப் புரிஞ்சுக்கங்க... அய்யோ அக்கா...ஆ..."

அந்த அழுகையையும், பேச்சையும் நிஜம் என்று நம்பி, கல்யாணி உடனே கணவரிடம் பேச, மனிதாபிமானம் மிக்க அவரும் பார்வதியை அனுப்புவது தான் நியாயம் என்று முடிவுக்கு வந்தார்.

அன்று ஊருக்குப் போய்விட்டு மறுநாள் காலை பஸ்ஸைப் பிடித்து மீண்டும் நடராஜன் வந்தபோது, பெட்டியுடன் பார்வதி தயாராக இருந்தாள்.

கழுத்தில் நாலு பவுன் செயின்.

கைகளில் கெட்டியாய் மூன்று பவுனில் வளையல்கள்.

காதில் தோடு.

கமலத்தின் பணத்தோடு, தாங்கள் பார்வதிக்கு இனாமாகக் கொடுக்கும் மூவாயிரத்துச் சில்லறையும் சேர்த்து ஒரு கவரில் போட்டுச் சதானந்தம்கொடுக்க, அவரை வணங்கி, அதைப் பார்வதி வாங்கிக் கொண்டாள்.

"போயிட்டு வாம்மா... தைரியமா போ.... எத நினைச்சும் கலங்காத... நல்ல வேளையா இப்ப வாவது தன் தப்பை உணர்ந்து உங்கக்கா உன்னைத் தன்னோடு வைச்சிக்கணும்னு நினைக்குறாளே! போய்க் கடிதாசு போடு... முடிஞ்சப்ப வந்து போயிட்டு இரு... அங்கேயே ஒரு இன்ஸ்டிட்யூட்ல சேர்ந்து எப்படியாவது பரிட்சைய எழுதிடு... நல்லா இரும்மா..."

அக்கறையுடன் கல்யாணி வாழ்த்திய வாழ்த்துக் களைப் பெற்றுக் கொண்டு, பார்வதி பெட்டியைத் தூக்கிக் கொண்டு மாமா பின்னால் நடந்தாள்.

மாம்பலத்துக்குச் சென்று, நல்லி கடையில் எழுநூறு ரூபாயில் சிவப்புப் பட்டுப் புடவை எடுத்து, பக்கத்து நகைக் கடையில் ஒரு பவுனில் தாலி வாங்கி, மஞ்சள் கயிற்றில் கோத்துக் கொண்டு, நேராக வடபழனி கோவிலுக்கு வந்தார்கள்.

முருகன் சன்னதியில் அவள் கழுத்தில் நடராஜன் மூன்று முடிச்சுகள் போட்டதும், ஸ்வீட் காரத்தோடு சாப்பாடு சாப்பிட்டு விட்டு, மதிய பஸ்ஸில் ஊருக்கு வந்து மஹா தைரியத்துடன் வீட்டுப் படி ஏறினார்கள்.

## 10

வீட்டு வேலைகள் முடிந்து வாயில் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்ட மீனாட்சிக்கு அலுப்பு மேலிட்டது.



இத்தனைக்கும் வேலை ஒன்றும் அதிகம் இல்லை

பழைய வீட்டைப் போலக் கிணற்றிலிருந்து நீர் சேந்தும் ஜோலி இல்லை; ஸ்விட்சைப் போட்டால் மாடி டாங்குக்குத் தண்ணீர் போய்க் குழாய்களில் கொட்டுகிறது.

இரண்டு வேளை பெருக்க அவசியம் இல்லை; மொஸைக் தரையை ஒரு தரம் பெருக்கி மெழுகி னாலேயே வழுக்கி மின்னுகிறது.

முன்பு போலத் தோய்த்த துணிகளை உலர்த்த இடம் இல்லாமல் அல்லாட வேண்டாம்; மொட்டை மாடியில் காயப் போட்டால் அரை மணியில் மொறு மொறுவென்று உலர்ந்துவிடுகின்றன.

புறாக் கூண்டு மாதிரி அந்த ஒண்டிக் குடித் தனத்தில் காற்று இல்லாமல் அவஸ்தைப் பட்டதற்கு இங்கு பிய்த்துக் கொண்டு போகிறது.

என்ன இருந்தாலும் தனி வீடு, தனி வீடுதான்.

ஆனாலும்?

சொல்லத் தெரியாத சங்கடம்.

புது வீட்டையும், அதன் வசதிகளையும் பூரணமாய் அனுபவிக்க முடியாமல் ஒரு வேதனை.

மீனாட்சி சாய்ந்து உட்கார்ந்தாள்.

பின் முதுகில் வலி, நான் இருக்கிறேன் என்றது

உதட்டைக் கடித்து, 'ஸ்ஸப்பாடி' என்று பெருமூச்சு விட்டபோது, கண்ணோரங்களில் நீர் நமநமவென்றது.

இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு நாள் திடுமென நடராஜன், "நாளைக்கு நாம வேற வீட்டுக்குப் போகப் போறோம். மத்தியானமா வண்டி வரும். அதுக்குள்ளார சாமான்களைத் தயார் பண்ணிடு; ஒத்தாசைக்கு கம்பனிலேந்து ரெண்டு ஆள் காலைல வருவாங்க" என்று சொன்ன போது அவள் திகைத்துத்தான் போனாள்.

இது என்ன திடீர் மாற்றல்?

இந்த வீட்டுக்கு என்ன குறைச்சல்?

பழகிய மனிதர்கள், பஸ் ஸ்டாண்ட், கடைகள் கிட்டத்தில்......

தன் சந்தேகத்தை இவள் வெளிப்படுத்திய போது நடராஜன் முறைத்தான்.

"சு? அவசியம் உன்கிட்ட காரணத்தைச் சொல்லித்தான் ஆகணுமோ? போடி உள்ளே, போய் சொன்னதைச் செய்."—

அதற்கு மேல் பேச விருப்பம் இல்லாதது போல அவன் வெளியில் போய் விட்டான்.

மறுநாள் காலையில் கம்பெனி ஆட்கள் வந்தனர்.

இவளுக்குச் சாமான்களைக் கட்ட உதவி பண்ணி, டாணென்றுமூன்றுமணிக்கு வந்த லாரியில்



அத்தனையையும் ஏற்றி விட்டுப் போய்ச் சேர்ந்தனர்.

"என்னக்கா இது? சொல்லாம கொள்ளாம கிளம்பறீங்க? நாலு நாள் முன்னாலே தெரிவிச்சிருந்தால், ஒரு வேளை எங்க வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிட்டிருப்போமே... எங்கே குடி போறீங்க? அட்ரஸ் தராட்டி போனா? நாங்க வந்து பார்க்க வேணாமா?" என்று சுகுணாவும், மற்ற போர்ஷன் காரர்களும் கேட்ட போது எந்த விவரமும் சொல்லத் தெரியாமல் அசடு வழிந்து விட்டு, "என்னைக் கேட்டுகிட்டா இந்த வீட்டுல எல்லாம் நடக்குது? கிளம்புன்னாரு... கிளம்பிட்டேன். புது வீட்டுக்குப் போயிட்டு நானே ஒரு நடை இங்க வந்து, உங்களை அழைச்சுட்டுப் போறேன்" என்று உண்மையை ஒப்புக் கொண்டு, லாரியுடன் வந்திருந்த வயசான க்ளார்க் அண்ணாமலை கூறியபடி குழந்தைகளை அழைத்துக் கொண்டு தானும் வண்டியின் முன் பக்கம் ஏறிக் கொண்டாள்.

ஊரின் கோடியில் இருந்த விநாயகர் கோவிலுக்கு எதிரில் புதுசாய் நிர்மாணிக்கப்பட்டு வரும் காலனியில் லாரி நுழைந்தது.

புது வீடு, வாஸ்தவத்திலேயே புதுசுதான்.

சின்னது... ஆனால் கைக்கு அடக்கமாய், வசதியாய் இருந்தது.

சாமான்களை எடுத்து வைத்த நாழிகையில் அண்ணாமலை பேச்சு வாக்கில் நடராஜன்

இப்போது பதவி உயர்வுபெற்று மேனேஜராகி விட்ட சேதியைத் தெரிவிக்க, மீனாட்சிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஸார் இப்ப கம்பெனிக்கு மேனேஜர் இல்லியாம்மா. அதான் நல்லதா தனி வீடு பார்த்திட்டார். இனியும் அந்த ஒண்டுக் குடுத்தனத்தில இருக்கிறது கௌரவமா? தவிர, ஸார் முதலாளிக்கு வேண்டப்பட்டவர்ன்றதால, வீட்டு வாடகைக்காக இருநூறு ரூபா கம்பனிலே கொடுப்பாங்கன்னும் அக்கௌன்டன்ட் சொன்னார். மொத்தத்துல நீங்க அதிர்ஷ்டசாலி, அதான் நா சொல்லுவேன்..."

கணவன் இப்போது வெறும் க்ளார்க் இல்லை, கம்பனியின் மேனேஜர் என்ற தகவல் சந்தோஷத்தைத் தந்தாலும் கூடவே இதை அவர் வாயால் தெரிந்து கொள்ளாமல் மூன்றாவது நபர் மூலம் தெரிந்து கொண்டதில் வருத்தமும் எழுந்தது.

அன்றிரவு நடராஜன் வீடு திரும்பியதும் இது பற்றி மீனாட்சி கேட்கவே செய்தாள்.

"என்னங்க... நீங்க இப்ப மேனேஜர் ஆயிட்டீங்களாமே...எனக்குச் சொல்லவே இல்லியே!"

நடராஜன் பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டை ஜன்னலுக்கு வெளியில் வீசி விட்டு, அசிரத்தையுடன் ஏறிட்டான்.

"இப்ப தெரிஞ்சு போச்சில்ல?"—

"என்னங்க! இது எவ்வளவு சந்தோஷமான விஷயம்! இதை அப்பவே என்னண்ட..."



"எதுக்குச் சொல்லனும்? உனக்கும் இந்த பிரமோஷனுக்கும் என்ன சம்பந்தம்? புது வீட்டுக்கு குடி வந்திட்டதால, ஆளே மாறிட்டம்னு எண்ணாதே. முதலாளி வாடகைப் பணம் கொடுக்கறேன்னாரு! கூடவே இன்னும் பல விஷயங்களையும் நினைச்சிப் பார்த்து, இப்படித் தனியா வர்றது எல்லாத்துக்கும் நல்லதுனு வந்தேன். மேனேஜர் சம்சாரம்னு ஆகாயத்துல நடக்காம, எப்பவும் போல இரு... முதல்ல உன் முகரக்கட்டைய என் கண்ல காமிக்காம, உள்ள போ... சாமான்களைப் பிரிச்சி வைச்சியா? ம்ம்... ஆவட்டும்."

கணவனின் குத்தலான பேச்சும், உள்மனமும் பழகிப் போனவைதான் என்றாலும், அன்றைக்கு அவள் தலையணையில் முகத்தைப் பதித்துக் கொண்டு சப்தமில்லாமல் அழவே செய்தாள்.

என்னமோ தெரியவில்லை, புருஷனின் போக்கில் ஏதோ ஒரு மாற்றம் இருப்பதை உணர முடிந்தவளுக்கு, அது என்ன என்று திட்ட வட்டமாகப் புள்ளி குத்தத் தெரியவில்லை.

இரண்டு, மூன்று மாசங்கள் வரைக்கும் கூட, முதுகு வலியோ, தலை சுத்தலோ, தகர டப்பா முகமோ, ஒட்டிப் போன தேகமோ— எதைப் பற்றியும் கவலைப் படாமல், வாரத்துக்கு இரண்டு தரமாவது அவளை முரட்டுத் தனத்துடன் அணுகி விடுவான்.

ஆனால், இப்போதெல்லாம் அப்படி இல்லை.

கிட்டத்தில் வந்தாலே முகத்தை அருவருத்துச் சுளிக்கிறார்.

தொடுவது பாவம் என்கிற மாதிரி தள்ளிப் படுக்கிறார்.

பெண்டாட்டி சுகம் வேண்டாம் என்று தீர்மானித்து விட்ட தினுசில் நடந்து கொள்கிறார்.

என்னாயிற்று இவருக்கு?

என் மேல் கோபமா?

அதுதான் இல்லாத நாளே இல்லையே!

தகர டப்பா மூஞ்சி; முகரக்கட்டைஎன்றுதிட்டித் திட்டி வெறுப்பு ஏறி விட்டதா?

நான் என்ன செய்வேன்?

ஒரு காலத்தில் கன்னமும் கதுப்புமாய் நானும் இருந்தவள் தானே?

'உங்கம்மா கொடுக்குற சீர்ல மயங்கி நா சம்மதிக்கல, உன் மாம்பழக் கன்னங்களுக்கு ஆசைப்பட்டுத்தான் சரினு சொன்னேன்'— என்று ஆதி நாட்களில் என்னிடம் கொஞ்சியது உண்டு தானே!

அது என்னவோ, நாலைந்து வருஷங்களாய் உடம்பை ரொம்பத்தான் படுத்துகிறது.

கிழவி மாதிரி கட்டு விட்டுப் போய் விட்டது.

இருபத்தெட்டு வயசில் இப்படி மனைவி இருந்தால், எந்த புருஷனுக்குக் கோபம் வராது?



வேண்டுமானாலும், இனிமேல் கொஞ்சம் நன்றாகச் சாப்பிட்டு, உடம்பில் தினமும் எண்ணெய் தடவிக் குளித்துப் பார்க்கலாமா?

மேனேஜர் பதவி என்றால் சம்பளம் நிறைய வரும், முன் அத்தனை கஞ்சத்தனம் செய்ய வேண்டாமோ?

திடுமென்று போன மாசத்தில் ஒருநாள் ஞானம் அக்கா கடைத் தெருவில் தன்னிடம் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

அவள் புருஷனும் நடராஜனோடு ஜமா சேர்ந்து கொண்டு சீட்டு ஆடும் ஆசாமிகளில் ஒருவர்.

"என்ன மீனாட்சி...இப்பல்லாம் உன் புருஷன் சீட்டு விளையாட வர்றதே இல்லியாமே, எங்க வீட்டுக்காரர் சொல்லிச் சொல்லி மாஞ்சு போறாரு; என்ன மந்திரம் போட்டே? எனக்கும் சொல்லிக் கொடேன். அந்தச் சனியனை அப்பவாவது விட்டொழிக்கறாரானு பார்க்கறேன்..."

அன்றைக்கு வீட்டுக்கு வந்துவிட்டுப் பிள்ளையாருக்கு நூற்று எட்டுத் தோப்புக்கரணங்களை மூச்சைப் பிடித்துக் கொண்டு போட்டதையும் இப்போது நினைத்துப் பார்த்தாள்

சீட்டுப் பழக்கத்தை விட்டுவிட்டு ஆபீசில் சிரமப்பட்டு உழைத்திருக்க வேண்டும். அதான் முதலாளி மனம் மகிழ்ந்து போய், பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்.

யார் செய்த புண்ணியமோ இத்தனை வருஷங்களாகப் பட்ட கஷ்டங்களுக்கு விடிவு பிறந்திருக்கிறது...

அம்மா தெய்வமாக நின்று எனக்கு ஆசீர்வாதம் பண்ணுகிறாளோ?

இனி, நானும் வலி, உடம்பு என்று முக்கி முனகாமல் ஆரோக்கியத்துடன் வளைய வர முடிந்தால் தேவலை.

நாளையிலிருந்து அரை லிட்டர் பால் உபரியாய் வாங்கி, படுக்கும் முன் ஒரு டம்ளர் குடித்தால் நிச்சயம் உடம்பில் கொஞ்சமாவது பளபளப்பு கூடும்.

அப்புறம்...

வாசல் பக்கம் வண்டி நிற்கும் சப்தம் கேட்க, மீனாட்சியின் கவனம் திரும்பியது.

டாக்ஸி...

இந்த வீட்டுக்கா?

யார் வருகிறார்கள்?

மூத்தது இரண்டும் எவர் வீட்டுக்கோ விளையாடப் போயிருக்க, கீதா மட்டும் கேட்டுக்கு ஓடியது.

நடராஜன்.

கூட வருவது யார் என்று புரியாமல் விழித்துக் கொண்டு மீனாட்சி நிற்க, 'வா பார்வதி' என்று நடராஜன் அழைத்தான்.

CONNEMARA PUBLIC LIBRARY
7- MAR 1997



பா...பார்வதி...

என் தங்கையா?

ஒரு வருஷத்திற்கு முன் பார்த்ததை விட இன்னும் பெரியவளாய் வளர்ந்திருக்க, இவள் எப்படி இங்கு வந்தாள் என்று மீனாட்சி மலைத்துப் போனாள்.

"ஏய்...என்ன பேக்கு மாதிரி முழிச்சுகிட்டு நிக்குற! வந்தவளை வானு சொல்லத் துப்பில்லையா?"

நடராஜன் அதட்ட, மீனாட்சி அவசரமாய் முன்னால் வந்தாள்.

"வா பார்வதி... வாம்மா, திடும்னு வந்திட்டியா... ஒண்ணும் புரிய..."

பேசிக் கொண்டே அருகில் சென்றவள் கண்களில் கழுத்து மஞ்சள் கயிறுவிழ, பேச்சு தடைப்பட நின்றாள்.

மஞ்சள் கயிறு.

தலை நிறையப் பூ.

இடுப்பில் கசங்கின புதுப் பட்டுப் புடவை...

என்னது இது!

ஒன்றும் புரியவில்லையே?

மலங்க மலங்க விழித்துக் கொண்டு நிற்பவளை லட்சியம் பண்ணாமல், "நீ வாம்மா" என்று

பார்வதியை அழைத்துக் கொண்டு நடராஜன் உள்ளே போக, மீனாட்சி தொடர்ந்தாள்.

நடராஜன் நேராகப் பார்வதியைத் தன் அறைக்கு இட்டுச் சென்றான்.

பெட்டியைக் கட்டில் மேல் வைத்துவிட்டு, "பாத்ரூம் பின்னால இருக்கு. போய் முகம் கழுவிக்கிட்டு வந்து கொஞ்சம் படுக்கறியா? களைப்பா இருக்குமே!" என்று கூறிப் புன்னகைக்க, கேட்டு, பார்த்துக் கொண்டிருந்த மீனாட்சி அதிர்ந்தாள்.

"எ...என்னங்க... என்ன நாடகமாடறீங்க இரண்டு பேருமா சேர்ந்துக் கிட்டு? இவ பெட்டிய உங்க அறைல ஏன் வைக்கறீங்க? ஏண்டி...அக்கா ஒருத்தி கல்லு மாதிரி நிக்கறேன்... கண்டுக்காம, சர்ருனு அவர் பின்னால போறியே! என்ன துணிச்சல் உனக்கு? அ?"—

ஆங்காரத்தோடு, ஏதோ புரிந்தும் புரியாமலும் மீனாட்சி கத்த, நடராஜன் அவளை முறைத்தான்.

"இந்தா, எது வேண்டுமானாலும் என்னண்ட கேளு... வீணா அவளை இதுல இழுக்காத... ஆமா..."

"என்னது, என்னது! அவளோட நா பேசக் கூடாதா? நா அவ அக்காங்க... எனக்கு இல்லாத உரிமை யாருக்கு இருக்கு?"—

"எனக்கு இருக்கு... ஏன்னா, நா அவ புருஷன்..."



"எ...என்ன...என்ன?"—

நம்ப முடியாமல் கண்களை விரித்து, ஹோ வென்று மீனாட்சி கூக்குரல் இட, நாலெட்டில் அவளருகில் வந்து முடியைப் பிடித்து நடராஜன் உலுக்கினான்.

"இந்தக் கத்தல் கோபம் எங்கிட்ட வேணாம்.. இன்னிக்கு காலைல கோவில்ல வைச்சி பார்வதி கழுத்துல தாலி கட்டிட்டேன். இனி அவ இங்கதான் இருக்கப் போறா... அவ கண் கலங்காம பார்த்துக்க வேண்டியது உன் பொறுப்பு... என்னை எதிர்த்து நடந்தின்னா, நடக்குறதே வேற... அப்புறம் நா பொல்லாதவனாயிடுவேன், பத்திரம்..."

மீனாட்சி மார்பில் பட்பட்டென்று அறைந்து கொண்டாள்.

புருஷனிடம் பேசத் தைரியம் இல்லாமல் தங்கையைப் பார்த்துக் கத்தினாள்.

"நாசகார முண்ட... தேவடியா நாய்... உன் கைவரிசையைக் காட்ட என் புருஷன்தான் அகப் பட்டானா? படுபாவி..,ஊர் உலகத்துல எத்தனை ஆம்பிளைங்க இல்லே... எவனையாவது மயக்கி யிருக்கக் கூடாதாடீ... மூதேவி... என் தலைல கல்ல போட்டிட்டியே..."

ஆத்திரம் தணியாமல், பார்வதி மேல் பாய்ந்து அறைய முற்பட, நடராஜன் அவளைத் தடுத்து, கன்னங்களில் ஓங்கி இரண்டு அறை விட்டான்.

"எவடி மூதேவி? இவளா? இல்ல நீதான்... பன்னிரண்டு வருஷமா உன்னோட குப்பை கொட்டியும் கிட்டாத அதிருஷ்டம் இவகூடப் பழகத் தொடங்கின ரெண்டு மாசத்துக்கெல்லாம் மடில ஏறி உட்கார்ந்து என்னை மேனேஜராக்கி இருக்கு. தெரியுமா? இவ ஸ்ரீதேவிடீ, தெரிஞ்சுக்க..."

"அய்யோ... அய்யோ... இந்தச் சிறுக்கிய போயி ஆகாசத்துல வைக்கறீங்களே... இது நியாயமா? அடீ... என் வயித்தெரிச்சல் உன்னைச் சும்மா விடாது... நீ கை கால் விளங்காம போயிடு..."

இந்த முறை நடராஜனின் அடிகள் முரட்டுத் தனமாக இருந்தன.

"திமிர் பிடிச்ச நாய்... என் முன்னாலியே அவளைத் திட்ட உனக்கு என்ன தைரியம்... ம்ஹூம்... இது சரிப்படாது. முதல்ல நீ உன் பிள்ளைங்களைக் கூட்டிக்கிட்டு இடத்தைக் காலி பண்ணு. போனாப் போவுது, சோத்துக்குத் திண்டாட வேணாம்னு கூடவே இருக்கட்டும்னு பார்த்தா, முறைக்கிறியா? மூதேவி... உன்னை ஒழிச்சு கட்டினாதான் எங்களுக்கு நிம்மதி... மூட்டை கட்டிகிட்டு நட... கண் முன்னால நிக்காம ஒழிஞ்சி போயிடு. எங்க போவியோ தெரியாது... அரை மணிலே ஒழியணும். சொல்லிட்டேன். தொலை... சனியனே!"

பிடரியைப் பிடித்து அவளை வெளியில் தள்ளிக் கதவைச் சாத்திய நடராஜன், பார்வதியைப் பார்த்து

CONNEMARA PUBLIC LIBRARY
— MAR 1997



மென்மையாய்ச் சிரித்து, "பயந்திட்டியா? இப்படி ஒரு கத்தல் போட்டு மிரட்டினாதான் வழிக்கு வருவ... வா, அரை மணி படுக்கலாம்... களைப்பா இருக்குதா? வாம்மா," என்று பரிவோடு பேசி அணைத்துக் கட்டிலில் படுக்க வைத்தான்.

வெளியில் தள்ளப்பட்டு அலங்கோலமாய்த் தரையில் கிடந்த மீனாட்சி, தலையில் அடித்துக் கொண்டு கதறினாள். 'இந்த அக்கிரமத்தைக் கேட்க யாருமே இல்லியா?' என்று புலம்பினாள். பயந்து போய்ப் பக்கத்தில் ஒண்டிக் கொண்ட கீதாவை அணைத்துப் பெரிசாய் மூக்கைச் சிந்தி அழுதாள்.

அரை மணியில் கண்களில் நீர் வற்றிப் போனதும், எழுந்து உட்கார்ந்து கேவினாள்.

"பாவி மனுஷா!

உன் சொரூபத்தைக் காட்டி விட்டாயே...

பழைய போர்ஷனில் இருந்தால் தெரு சிரித்து விடும் என்று திட்டம் போட்டு இங்கு குடியை மாற்றினாயா?

இப்போது நான் என்ன செய்வேன்? யாரிடம் போய் நிற்பேன்?

ஒழி... ஒழி என்கிறாயே... எங்கே போவேன்?

எனக்குப் போக்கிடம் ஏது?

மூன்று பெண்களை வைத்துக் கொண்டு யாரிடம் அண்டுவேன்?

எனக்கு நாதி இல்லை என்று தெரிந்துதானே, போ என்கிறாய்?

ஒரேயடியாய்ச் செத்து ஒழிந்துவிட்டால்?

தண்டவாளத்தில் தலையைக் கொடுத்து விடட்டுமா?

அப்புறம் என் குழந்தைகள் கதி?

அய்யோ... அய்யோ...''

பார்வதியை நினைக்கையில், மீனாட்சியின் வயிறு பற்றிக் கொண்டு எரிந்தது.

'கூடப் பிறந்த தங்கையாடீ... நீ.

என்னைச் சாக அடித்து விட்டு, உனக்கு வாழ்வு ஒரு கேடா?

அடி, நாசகாரி... நீ நன்றாக இருப்பாயா?

சத்தியமாய் உருப்பட மாட்டாய்.

அம்மா... ஆ... அய்யோ அம்மா...... ஆ.. தாலி கட்டினவனும், கூடப் பிறந்தவளுமாய்ச் சேர்ந்து மிதிக்கிறார்களே... நான் என்ன செய்வேன்?'

போக்கிடம் இல்லை, சாகவும் துணிவு இல்லை. இங்கு இருப்பது ஒன்றுதான் தனக்கும், குழந்தைகளுக்கும் இருக்க இடமும், உண்ண உணவும், உடுக்க உடையும் கொடுக்கும் என்பது தெளிவாகப் புரிய, அழுது ஓய்ந்து போனவளாய் மெள்ள எழுந்தாள்.

CONNEMARA PUBLIC LIBRARY
7- MAR 1997



குளியலறைக்குச் சென்று முகத்தைக் கழுவிக் கொண்டாள்.

என் குழந்தைகளின் எதிர் காலத்துக்காக எந்த இன்னலையும் பொறுத்துக் கொள்வேன் என்று எண்ணிக் கொண்டாள்.

அறைக்குள் இருக்கும் வெட்கம் கெட்டவர்கள் வெளியில் வரும்போது அவர்கள் முகங்களில் விழிக்கப் பிடிக்காமல் சோர்ந்து போய் வாசல் திண்ணைக்கு வந்து உட்கார, விளையாடப் போயிருந்த கலாவும் மாலதியும் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே ஓடி வந்தார்கள்.

"அம்மா... உனக்கு விஷயம் தெரியுமா? மூணாவது வீட்டு வடிவேலு மாமா கிட்ட ஒரு வெள்ளைப் பசு இருக்கும் பாரு; அதோட கறவை நின்னு போச்சின்றதுக்காக அடிமாடா வித்திட்டாங்கம்மா.. இப்பத்தான் சிகப்பு முண்டாசோட ஒரு ஆள் அதை ஓட்டிட்டுப் போறாரு... ம்மமானு கத்திகிட்டே போவுதும்மா; பாவம்... நீ பார்க்கலை?",

யார் வீட்டிலோ அடிமாடாக விற்கப்பட்டுவிட்ட வாயில்லா ஜீவனுக்காகப் பரிதாபப்பட்டு கலா பேச, அந்த மாட்டுக்கும் தனக்கும் அதிக வித்தியாசம் இல்லாமல் போய்விட்டதை நினைத்த நிமிஷத்தில், அடங்கி இருந்த அழுகை மீண்டும் வெடிக்க, மீனாட்சி இரண்டாக மடிந்து பெரிசாய்க் கதற முற்பட்டாள்.

□ □ □